Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 தை 21 ஹிஜ்ரி 1426 முஹர்ரம் 04 (03.02.2006) வெள்ளிக்கிழமை இதழ் 126

யாழ்.நகரில் தனித்துவமான கலைநயம் மிக்க துல்லியமான அச்சுவேலைகளுக்கு

SP சிறந்த இடம்

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்

நாடாளுமன்றத்தில் குண்டுப் புரளி; பெருமெடுப்பில் தேடுதல் வேட்டை!

14 ஆம் திகதி வரை சபை ஒத்திவைப்பு

கொழும்பு — நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடியபோது - எதிர்க்கட்சி ஆசன வரிசையில் குண்டுப் பொதி இருப்பதாகக் கிளம்பிய புரளியை அடுத்து - நாடாளுமன்ற அமர்வுகள் எதிர் வரும் 14 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டன.

நேற்று நாடாளுமன்றில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

சபாநாயகரின் தலைமையில் நாடாளுமன்ற நடவடிக்கைகள் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமாகின. இருப்பினும், சபை நடவடிக்கைகள் 2 நிமிடங்கள் மட்டுமே இடம்பெற்றன. நேற்றைய நாடாளுமன்ற அமர்வுக்கு முன்னதாக காலை 9.30 மணியளவில் எதிர்க்கட்சி ஆசன வரிசையில் பொதியொன்று காணப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து நாடாளுமன்றம் பாரிய சோதனை நடவடிக்கையொன்றுக்கு உட்படுத்தப்பட் டது.

அதனால் நாடாளுமன்ற அமர்வு சற்று பின் தள்ளப்பட்டு குண்டு செயலிழக்க வைக்கும் விசேட படைப்பிரிவு மற்றும் விசேட படையணிகள், மோப்ப நாய்களின் துணையுடன் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டன.

தேடுதலில் ஈடுபட்ட மோப்ப நாய் ஒன்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் நவரத்தின பண்டாவின் ஆசனத்துக்கு அருகில் சென்று அந்த இடத்தைவிட்டு அகலாததால் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு சிக்கலான நிலையொன்று ஏற்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

சந்தேகத்துக்குரிய எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை!

நாடாளுமன்ற பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு

நாடாளுமன்றத்தினுள் சந்தேகத்துக்கு இடமான எந்தப் பொருளும் கண்டுபிடிக்கப்படவில்லை என நாடாளுமன்ற பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று நாடாளுமன்றத்தில் சந்தேகத்துக்கிடமான பொதி ஒன்று இருப்பதாக களேபரம் ஏற்பட்டது. எதிர்க்கட்சி ஆசனங்களின் பின்புறமாக பொலிஸ் நாய்களுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் சந்திர தெரிவித்தார்.

தொடர்ந்து சந்தேகத்துக்குரிய இடத்தை இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் சோதனையிட்டனர். மேலதிக ஆய்வுக்காக நிலவிரிப்பு துண்டுகளையும், மரத்துண்டுகளையும் இரசாயன பகுப்பாய்வாளர்கள் எடுத்துச் சென்றாக நாடாளுமன்ற பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்தப் பதற்றநிலை தொடர்பாக விசாரணை (12 ஆம் பக்கம் பார்க்க)

அரச தரப்புக் குழுத் தலைவராக நிமால் சிறிபால டி சில்வா தெரிவு

கொழும்பு

ஜெனிவாவில் போர்நிறுத்த அமுலாக்கம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவுள்ள அரச தரப்பு குழுவுக்கு சுகாதாரத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமைவகிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக ஊடகவியலாளர்களிடம் ஊடகத் துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

இந்தக் குழுவில் முஸ்லிம்களுக்கும் இடமளிக்கப்படும் என்பது குறித்து விரைவில் அரசாங்கம் அறிவிக்கும் எனத் தெரிவித்தார். 61 வயதான நிமால் சிறிபால டி சில்வா இங்கிலாந்தில் சட்டக் கல்வி கற்றவர் என்பதுடன், நூற்றுக்கணக்கான அரசியலமைப்பு விவகார, மனித உரிமைகள் குறித்த வழக்குகளில் வாதாடியவராவார்.

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் சட்ட ஆலோசகராகவும் இவர் பணியாற்றியிருந்தார். 1989 ஆம் ஆண்டு முதன் முதலாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான இவர் பல்வேறு அமைச்சுப் பொறுப்புக்களை வகித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில் ஹர்த்தால்!



வவுனியா

அண்மை நாட்களில் வவுனியாவில் வர்த்தகர்கள் கொலை செய்யப்படுவது மற்றும் பிரயட்ப்

நாடாளுமன்றின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தவில்லை!

வவுனியாவில் ஹர்த்தால்!

வவுனியா

அண்மை நாட்களில் வவுனியாவில் வர்த்தகர்கள் கொலை செய்யப்படுவது மற்றும் மிரட்டப்படும் சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியாவில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த ஹர்த்தாலுக்கு வவுனியா வர்த்தக சங்கம் அழைப்பு விடுத்திருந்தது.

ஹர்த்தால் காரணமாக வவுனியாவில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. இதன் காரணத்தால் நேற்று வவுனியாவில் இயல்புநிலை பாதிக்கப்பட்டது.

வர்த்தகர்கள் கொலை செய்யப்படுவது, கடத்தப்படுவது, மிரட்டப்படும் சம்பவங்கள் உடன் நிறுத்தப்படவேண்டும் எனவும் இதற்கு அரசாங்கமும், பாதுகாப்பு அதிகாரிகளும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் வவுனியா வர்த்தகசங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(03)

நாடாளுமன்றின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தவில்லை!

ஐ.தே.க குற்றச்சாட்டு

கொழும்பு

அரசாங்கத்தால் நாடாளுமன்றின் பாதுகாப்பைக்கூட உறுதிப்படுத்த முடியாதுள்ளதாக ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தினார். நாடாளுமன்றத்தில் குண்டு இருப்பதாகக் கூறப்பட்டதையடுத்து நாடாளுமன்றம் சோதனைசெய்யப்பட்டு சபை ஒத்திவைக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இதேபோன்று குண்டுப் புரளி எழுப்பப்பட்ட போதிலும், குண்டுகள் வீசப்பட்டு எமது தலைவர்கள் கொல்லப்பட்டபோதும் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படவில்லை.

ஆனால், தற்போதைய நிலைமையில் நாடாளு மன்றத்தில் குண்டு இருப்பதாக எழுப்பப்பட்ட வதந்தியை அடுத்து நாடாளுமன்றம் சோதனையிடப்பட்டும் அதன் பின்னர் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்ற நிலைமையைப் பார்க்கின்றபோது - நாடாளுமன்றத்துக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(01)

ரி.ஆர்.ஓ தொண்டர்கள் கடத்தப்பட்டதில் சந்தேகம்!

என்கிறார் அமைச்சர் மங்கள

கொழும்பு

தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக தற்போது விசேட விசாரணைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் ஊடக (12 ஆம் பக்கம் பார்க்க)

பாடசாலை அதிபர் கடத்தல்!

மட்டக்களப்பு

வாழைச்சேனை இந்துக் கல்லூரியின் அதிபர் தவராசா (வயது 56), அடையாளம் தெரியாத நபர்களால் நேற்று முற்பகல் 11 மணியளவில் கடத்திச் செல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன.

பாடசாலையில் இவர் கடமையாற்றிக் கொண்டிருந்தபோது முற்பகல் 11 (12 ஆம் பக்கம் பார்க்க)

படையினரால் கடத்தப்பட்ட மாணவன் மனித உரிமை ஆணைக்குழுவால் மீட்பு

யாழ்ப்பாணம்

யாழ். நகரப்பகுதியில் இராணுவத்தினரால் கடத்தப்பட்ட மாணவர் ஒருவரை மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் முகாமுக்குச் சென்று மீட்டனர்.

யாழ். ஆரியகுளம் சந்தியில் நேற்று மாலை நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

யாழ். - பருத்தித்துறை வீதியில் தனது சகோதரியுடன் மோட்டார் சைக்கிளில் கொக்குவிலைச் சேர்ந்த மாணவர் ஒருவர் சென்று கொண்டிருந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்....

EXPOAIR

021-222 3891, 222 6297, 077-2349999, 011-2372952/3, 011 - 2360290/1

email:jaffna@expoavi.com, reservations@expoavi.com. your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமானசேவை...

தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களை விடுவிக்க சர்வதேச சமூகம் உதவவேண்டும்

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் ——

கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்களை விடுதலை செய்வதற்கு அரசாங்கமும், சர்வதேச சமூகமும் உதவவேண்டும் என யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வெலிகந்தவில் வைத்து கடத்திச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்களை விடுவிக்குமாறு கோரி வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஒரு ஆரோக்கியமான சமூக உருவாக்கத்துக்கு உயிரைச் சிதைப்பது உதவுமா? என்பதைச் சிந்திக்க வேண்டும். பயப்பீதியை ஏற்படுத்தி, மனவடுவை உருவாக்குவதால் பண்பு நிறைந்த சமூகம் சிதைவடைவது தான் நடக்கும். வேண்டாத பல பண்புகள் நம் மத்தியில் வேகமாக வளர்ச்சியடைந்து வருவது கவலை தருகிறது. நாம் ஒவ்வொருவரும் தனித் தீவுகளாகி கையறு நிலையில் இருக்கிறோம். களவு, பழிவாங்கல், அச்சுறுத்தல், ஆட்கடத்தல் இத்தனையும் பார்த்து மௌனியாகி இருப்பதைத் தவிர வேறெதையும் செய்யமுடியவில்லையே!

அண்மைக்காலங்களில் நடந்த பல சம்பவங்களில் நூற்றுக்கணக்கான எம்மவர்கள் மாண்டு போயுள்ளனர். மேலும் பலரைக் காணவில்லை. இவற்றுக்கெல்லாம் சமாதானப் பேச்சுக்கள் தீர்வாக அமையப்போகிறது என்று ஏங்கி நிற்பவர்கள் நாங்கள்.

இயல்புநிலை தோற்ற வேண்டுமென்று நெஞ்சார வேண்டியவர்கள். அதற்கான வாய்ப்புகள் கைகூடியுள்ளதே என்று பெருமூச்சு விடாதவர்களே இருக்கமுடியாது. அதற்கெல்லாம் இடிவிழுந்தால் போல் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மனிதநேயப் பணியாளர்கள் கடத்தல் சம்பவச் செய்தி எமக்குக் கிடைத்துள்ளது.

இனக்கலவரங்கள் தொடக்கம் சுனாமி பாதிப்பு வரை - பாதிக்கப்பட்ட மக்களுக்காக இரவு, பகல் பாராது அர்ப்பணிப்புடன் சேவை செய்தவர்கள், மனிதநேயப் பணியாளர்கள். மக்களோடு மக்களாக நின்று மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பவர்கள். இந்தப் பணியாளர்கள் கடத்தப்படுவது என்பது எந்த வகையில் நியாயப்படுத்தப்படக்கூடியது என்பது புரியவில்லை.

ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் தான் மனிதநேயப் பணியாளர்களுக்கு அச்சுறுத்தல் நிலவுகிறது என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அதே போன்றதான நிலை எமது பிரதேசத்தில் காணப்படுவது மனதைப் பிழிகிறது.

மக்கள் பணியாளர்கள் எப்போதும் கண்மணிகளைப்போல் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டுவிடக் கூடாது. அவர்களுக்கு ஏற்படுகின்ற ஆபத்து நலிந்து, நொந்து போயுள்ள மக்களுக்கான ஆபத்து. இந்த ஆபத்தை, மனிதநேயமற்ற செயலைக் கண்டித்தாக வேண்டும். அதேவேளை மனிதநேயப் பணியாளர்களை விடுவித்தாகவும் வேண்டும்.

மனிதநேயப்பணியாளர்கள் பத்துப் பேரின் விடுதலையில்தான் எமது மக்களின் சமூகப் பொருளாதார மீள் உருவாக்கல் பணிகள் தங்கியுள்ளன. எமது பிரதேசத்தில் புனர்வாழ்வுச் செயற்திட்டங்களில் அநேகமானவை மனிதநேய அமைப்புக்களின் செயற்திட்டங்களிலேயே தங்கியுள்ளன.

அரசினால் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வுச் செயற்திட்டங்களை விட அதிகமாக மனிதநேய அமைப்புக்களின் செயற்திட்டங்களே காணப்படுகின்றன.

இவ்வாறான பணிகளில் ஈடுபடும் அமைப்புக்களும், பணியாளர்களும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளனர். பயத்தில் உறைந்து போயுள்ளனர். தமது பணிகளை எவ்வாறு தொடர்வது என்று சிந்திக்கிறார்கள். என்றுமில்லாதவாறு மனிதநேயப் பணியாளர்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியுள்ளது.

மக்கள் பணி செய்பவனுக்குரிய பாதுகாப்பை, புறச்சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமை. அதனைச் சரிவரச் செய்தாக வேண்டும். தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களைக் கடத்தியவர்கள் அவர்களை விடுவித்து மனிதநேயப் பணிக்கு உதவ வேண்டுமென்று வினயமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

எதிர்காலச் சந்ததியின் வளமான வாழ்வுக்காக நாம் மீள் உயிர்த்தாக வேண்டும். இந்த மீள் உயிர்ப்பு நடப்பதற்காக வேதனை மிகுந்த, கண்டிப்புக்குரிய கடத்தல் நடவடிக்கையைக் கைவிட வேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

சர்வதேசத்திடமும், அரசாங்கத்திடமும் மனிதநேயப் பணியாளர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை உடன் எடுக்கவேண்டுமென்று மக்கள் சார்பாகவும், சிவில் சமூக அமைப்புக்கள் சார்பாகவும் பகிரங்க வேண்டுகோளை விடுக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளரை மீட்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்!

உயர்கல்வி நிறுவனங்களின் அமையம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் ——

வெலிக்கந்த சோதனைச்சாவடி அருகில் வைத்து தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள் கடத்தப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன், அவர்களை விடுவிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் விரைந்து மேற்கொள்ள வேண்டுமென யாழ். மாவட்ட உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் வலியுறுத்தியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை வெலிக்கந்த பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்கள் கடத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மட்டக்களப்பிலிருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள் ஐவரும், மற்றுமோர் பிரிவாக வந்த ஐவரும் இராணுவத்தாலும், ஒட்டுக் குழுவாலும் கடத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவமானது அரசாங்கத்தின் சமாதான பற்றின்மையையே வெளிக்காட்டுவதாக அமைகிறது.

மக்களுக்குச் சேவையாற்றும் தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் கடத்தப்பட்டதென்பது தமிழ் மக்களின் மீதான வன்முறையின் உச்சக்கட்டமாகவே உள்ளது. அத்தோடு ஏனைய தொண்டு அமைப்புக்களுக்கும் இது ஓர் அச்சுறுத்தல் நிகழ்வாகவே கருதவேண்டியுள்ளது.

பேச்சுக்கள் மீது உண்மையான பற்றை சிங்கள தேசம் கொண்டிருக்குமானால், அதற்கான புறச்சூழலை ஏற்படுத்த அரசும் - அதன் இராணுவமும் முன்வந்திருந்தால் வெறுமனே பேச்சுவார்த்தை என்று உலகின் கண்களுக்கு அரசியல் நாடகத்தை நடத்திக்கொண்டு மறுபுறத்தில் தமிழர்களைக் கடத்துதல், கெடுபிடிகளை மேற்கொள்ளல் போன்ற இராணுவ வன்முறைதள் மேற்கொள்கின்ற இராணுவத்தின் செயற்பாடானது பேச்சுக்கான இயல்புநிலையை மேலும் மோசமாக்கும் நிகழ்வாகவே அமைகிறது.

அரசாங்கம் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என வேண்டுவதுடன், சர்வதேசமும் இந்தப் பணியாளர்களை மீட்பதற்காக சகல வழிகளிலும் உதவவேண்டும்.

ஜெனிவாவில் பேச்சு நடக்கும் என இடம் தீர்மானிக்கப்பட்ட பின்னரும் கூட இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் ஓர் இயல்புநிலை ஏற்படுத்தப்படாமல் தொடரும் இவ்வாறான கடத்தல் சம்பவங்கள் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தையும், பேச்சுவார்த்தை மீது தமிழ் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையையும் வலிமையிழக்கச் செய்கிறது.

பேச்சுக்கு முன்னர் பேச்சுக்கள் மீதான நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு அரசினுடையதாகும். இத்தகைய நம்பிக்கையை வலுப்படுத்தாது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடுவது தமிழர்களின் பொறுமையைச் சீண்டிப்பார்க்கும் நடவடிக்கையாக அமைவதுடன், மீண்டுமோர் யுத்தத்தை எமது மக்கள் மீது திணிக்கின்ற செயற்பாடாகவும் அமைகிறது.

எனவே அரசு விரைவாக கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இயல்புநிலையை ஏற்படுத்துவதற்கான அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்துகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தம்

13.01.2006 நமது ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த சாவகச்சேரி மடுப்பதி, கண்டி வீதியைச் சேர்ந்த பா.றோயல்குமார் என்னும் 22 வயது இளைஞன் APLASTIC ANAEMIA எனும் நோயால் பீடிக்கப்பட்டுள்ளாரெனவும், அவசர சிகிச்சைக்காக பன்னிரண்டரை லட்சம் ரூபா நிதி தேவைப்படுவதாகவும், கருணை உள்ளம் படைத்தோர் இந்த நிதியுதவியை சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் 207-024534-0 என்ற கணக்கு இலக்கத்துக்கு அனுப்பி வைக்குமாறு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மூலமாக கோரப்பட்டிருந்தது. இந்தச் செய்தியில் இளைஞனுக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியரின் பெயர் தவறுதலாக வேறு ஒருவரின் பெயர் இடம் பெற்றுள்ளது என்றும் - பிரஸ்தாப இளைஞனுக்கு யாழ்.போதனா வைத்தியசாலை குருதியியல் நிபுணர் டொக்டர் ரி.புஸ்பராஜா சிகிச்சையளித்து வருவதாக சாவகச்சேரி லயன்ஸ் கழகம் அறிவித்துள்ளது.

நிறுவன தின விழாவும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம் ——

ஐ.ஐ.எஸ் நிறுவனத்தின் 10 ஆவது ஆண்டு நிறுவன தின விழாவும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி ஜுபிலி மண்டபத்தில் நிறுவன இயக்குனர் கே.விக்னேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறப்புச் சித்தியெய்திய மாணவர்களுக்கு சிறப்பு விருதுகளும் வழங்கப்படவுள்ளன. கடந்த கல்வியாண்டில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவி சுரேகா பத்மநாதன் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார். அத்துடன் பவித்ரா அருள்ராசன், இகழ்வஞ்சி கனகநாயகம், மயூரி ரட்ணவடிவேல், பூபாலசிங்கம் நிதர்சன், கோபாலசிங்கம் கார்த்திகன், அப்புத்துரை சுரேஸ்குமார், சுபாசினி கோபாலபிள்ளை ஆகியோர் சிறப்பு விருதுகளைப் பெறவுள்ளனர்.

காட்சி : பு.நே. 10.30, 2.15 மட்டும்.
ரிக்கெற் முற்பதிவு
செய்துகொள்ளலாம்.

காட்சிகள்;- 10.30, 2.30 (புதிய நேரம்)

காட்சிகள் 11.00,2.30,5.30 (பு.நே)

காட்சிகள்;- 10.30, 1.30, 4.30, 7.30. (புதிய நேரம்)

மரண அறிவித்தல்

முத்துக்குமாரு பரிபூரணம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **முத்துக்குமாரு பரிபூரணம்** நேற்று 02.02.2006 வியாழக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற முத்துக்குமாருவின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, இராசம்மா, தங்கமணி, செல்லக்கண்டு, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளையின் அன்பு மைத்துனியும், இலட்சுமணன் (அமரர்), கந்தசாமி (அமரர்), சரஸ்வதி (அமரர்), அன்னலட்சுமி, நகுலாம்பிகை, பரஞ்சோதி, கனகசுந்தரம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், புனிதவதி, செல்வரத்தினம், பஞ்சலிங்கம், லோகநாதன், குமுதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், லக்ஸ்மன் (சுமன்), ஹம்சாயன், கஜானா, யதுர்சாயன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை (03.02.2006) காலை 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மு.கனகசுந்தரம் (ராசா - மகன்)
க.லக்ஸ்மன் (பேரன்)

மில் ஒழுங்கை,
மல்லாகம். (2184)

திருகோணமலையிலிருந்தும், மன்னாரிலிருந்தும் அகதிகளாகச் சென்ற 28 பேர் இராமேஸ்வரத்தில் தரையிறங்கிய காட்சி.

உள்ளூராட்சித் தேர்தலில் 10 வீதமே பிக்குகள்!

கொழும்பு

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் பத்துவீதமான பிக்குகளே வேட்பாளர்களாக நியமிக்கப்படுவர் என்றும், மிகுதியானோர் துறவிகள் அல்லாதோரே போட்டியிடுவர் என்று ஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ளது.

இதற்கமைய ஹெல உறுமயவின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் விசேட கூட்டம் இன்றும், நாளையும் கொழும்பில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டத்திலேயே பத்துவீதமான பிக்குகளும், 90 வீதமான பிக்குகள் அல்லாதோரும் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களாகத் தெரிவுசெய்யப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் தலையிட்டு பணியாளரை விடுவிக்க வேண்டும்!

தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டப் பணிப்பாளர்

கொழும்பு

தனது பொறுப்பை உணர்ந்து சமாதானச் சூழலுக்கு அமைவாக சர்வதேசத்தின் கருத்துக்களை கவனத்தில் எடுத்து கடத்தப்பட்ட 8 தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களையும் அரசாங்கம் தலையிட்டு விடுவிக்கவேண்டும் என தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி தெரிவித்தார்.

பி.பி.சி தமிழோசைக்கு நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்த அவர் தொடர்ந்து கூறுகையில் -

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பயிற்சிப் பட்டறைக்குச் சமூக மளிக்க தவறியதையடுத்தே இவர்கள் கடத்தப்பட்டதைஉணர்ந்துகொள்ளமுடிகிறது. இதன்மூலமாகவே மேற்படி நபர்கள் கடத்தப்பட்ட சம்பவம் உறுதியானது. ஆகவே எமது செயற்பாடான நிவாரணம், புனர்வாழ்வு போன்ற நடவடிக்கைக்கு இது மாபெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளை மனிதாபிமானத்துக்கு எதிரானதாகவே நாம் கருதுகிறோம். அதாவது இன, மத வேறுபாடு இன்றி மக்களுக்கு பணி செய்துவருகின்ற தமிழர்களின் அமைப்புக்கு விடுக்கப்பட்ட பெரிய அச்சுறுத்தல் என்றே நாம் கருதுகிறோம்.

இது தவிர இந்தச் செயற்பாடுகள் இலங்கையில் பணியாற்றும் உள்ளூர், வெளியூர் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதுடன், சமாதானப் பேச்சுக்கள் தொடர்வதற்கான அச்சநிலையை ஏற்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

ரீ.ஆர்.ஓ. பணியாளர்கள் கடத்தப்பட்டதற்கு வவுனியா பொது அமைப்புகள் கண்டனம்!

வவுனியா

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஊழியர்கள் கடத்தப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் ஜனாதிபதி உட்பட முக்கிய பிரமுகர்களுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

43 அரசார்பற்ற நிறுவனங்கள் அங்கத்துவம் வகிக்கும் இந்த ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்-

இலங்கை அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக பதிவு செய்யப்பட்டு சட்டரீதியாகச் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனமான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊழியர்களின் செயற்பாடுகளைத் தடுத்தலானது வேதனைக்குரியது.

வவுனியா மாவட்டத்தில் ஒரு காத்திரமான அபிவிருத்தி வேலை செய்து வருபவர்கள் என்ற அடிப்படையில் எமது அங்கத்துவ நிறுவனத்தின் ஊழியர்கள் கடத்தப்பட்டதைக் கண்டிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட 5 பேரின் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வதிவிட பிரதிநிதி, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பணிப்பாளர் மற்றும் கொழும்பு மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் பணிப்பாளர் ஆகியோருக்கு வவுனியா அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளது.

விருந்தினரின் விபரங்களை பதிவுசெய்ய அறிவுறுத்து!

கொழும்பு

மலையக தோட்டப்பகுதிகளுக்கு வருகைதரும் புதியவர்கள் மற்றும், விருந்தாளிகள் பற்றிய விபரங்களை பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கவேண்டும். என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும், தோட்ட முகாமையாளர்களுக்கும் இடையில் ஹற்றனில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அட்டன், கினிகத்தேன, நோட்டன்பிரிஜ், நோர்வூட், பொகவந்தலாவ, மஸ்கெலிய, நல்லதண்ணி உட்பட பல பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தோட்டப்பகுதிகளுக்கு புதிதாக வருபவர்களின் விபரங்கள் தோட்ட முகாமைத்துவத்தின் ஊடாக பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்து பதியப்படவேண்டும் என இங்கு வலியுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (01)

ஆர்.பி.ஜி செலுத்திய சிப்பாய்க்குப் பிணை!

கொழும்பு

இரத்மலானை ஆடைத் தொழிற்சாலைக்குள் தவறுதலாக ஆர்.பி.ஜி குண்டு விழுந்த சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட விமானப்படையைச் சேர்ந்த சிப்பாய் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இரத்மலானை விமானப்படை முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரின் தவறால் வெளிப்பட்ட ஆர்.பி.ஜி குண்டு அருகிலிருக்கும் ஆடைத் தொழிற்சாலையில் விழுந்ததில் பெண் ஊழியர் ஒருவர் காயமடைந்தார்.

இதனையடுத்து விமானப்படைச் சிப்பாய் கல்கிசைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, கைத்தவறால் அபாயகரமான சூழ்நிலையைத் தோற்றுவித்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை 1500 ரூபா காசுப் பிணையிலும், 2 லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல நீதிபதி அனுமதித்தார்.

இந்த வழக்கின் மேலதிக விசாரணைகள் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இரத்மலானை விமானப்படை முகாம்மீது தாக்குதல் நடத்தப்பட்டால் அதற்கு முகம் கொடுப்பது எவ்வாறு என்பது குறித்து பயிற்சியளிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோதே கையிலிருந்த ஆர்.பி.ஜி குண்டு வெளிப்பட்டிருப்பதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்ததாக - கல்கிசைப் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி விலி அபேய நாயக்க தெரிவித்தார்.

ஐ.தே.கவின் வழக்கு மீதான விசாரணை திங்களன்று!

யாழ்ப்பாணம்

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை பிற்போடுமாறுகோரி ஐக்கியதேசியக் கட்சி தாக்கல் செய்துள்ள மனு எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

2005 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புக்கள் தயாரித்து முடியும்வரை உள்ளூராட்சி தேர்தலை பிற்போடுமாறுகோரி ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் என். பி.கே.கே.வேரகொடவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் வாக்காளரது பெயர்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும், அது மிகவும் அநீதியானது எனவும் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை - ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் வென்றெடுப்பதற்காக கோரிக்கைகளைக் கருத்திற்கொள்ளாது வடகிழக்கு மாகாணங்களிலும் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துமாறு ஜாதிக ஹெல உறுமய ஜனாதிபதியிடம் கேட்டுள்ளது.

இதே வேண்டுகோளை தேர்தல் ஆணையார் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரிடமும் விடுக்கவுள்ளதாக கூறும் ஜாதிக ஹெலஉறுமயவின் பேச்சாளர் நிஸாந்த சிறீவர்ணசிங்க - புலிகள் இயக்கத்தினதும் ஏனைய அரசியல் கட்சிகளினதும் கோரிக்கைகளுக்கு ஏற்ப வடக்கில் தேர்தலைப் பிற்போட முடியாது எனவும் தெரிவித்தார்.

சர்வதேச நிதிநிறுவனப் பிரதிநிதிகளின் வன்னிப் பயணத்துக்கு ஹெல உறுமய எதிர்ப்பு

கொழும்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்த சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கிளிநொச்சி செல்வதற்கு ஜாதிக ஹெல உறுமய கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் கூறுகையில் -

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஐ.நா.சபை பிரதிநிதி ஆகியோர் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

இது நாட்டின் இறையாண்மைக்கும், ஐக்கியத்துக்கும் எதிரானது. கிளிநொச்சியில் முதல்முறையாக இத்தகைய உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பெரும் எண்ணிக்கையில் சந்தித்துப் பேசுகின்றனர்.

ஜெனிவா பேச்சுக்களுக்கு முன்னதாக ஏதோ மறைமுகத் திட்டத்தை விடுதலைப் புலிகள் வைத்துள்ளனர் என்பதையே இந்தச் சந்திப்பு எடுத்துக் காட்டுகிறது.

சுனாமி மீளமைப்புப் பணிகள் தொடர்பாக இந்த உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆலோசனை நடத்த வேண்டுமெனில், அதை அரசாங்கத்துடன் நடத்த வேண்டுமே



தவிர தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அல்ல. தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழர்களின் பிரதிநிதி என்ற அடையாளத்தை வழங்க சர்வதேச சமூகம் தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக இருக்கும் இத்தகைய சந்திப்புகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தடுக்கவேண்டும். நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பார் என்றும், ஐக்கியத்துக்கு அச்சுறுத்தலான எதுவிதமான செயற்பாட்டையும் அனுமதிக்கமாட்டார் என்றும் தான் மகிந்த சிந்தனைமீது நம்பிக்கை வைத்து மக்கள் வாக்களித்துள்ளனர்.

அமைதிப் பேச்சுகளின் விடுதலைப் புலிகளுக்குச் சாதகமான அம்சங்களை உருவாக்குவதற்காக அரசாங்கத்துக்கு உளவியல் ரீதியாக சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்து வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

குற்றச்செயல்களில் ஈடுபடும் இலங்கையருக்கு தண்டனை வழங்குவதற்குச் சட்டதிருத்தம்!

கொழும்பு

வெளிநாடுகளில் குற்றச்செயல்களில் ஈடுபடும் இலங்கையர்களுக்கு தண்டனை வழங்கக்கூடிய வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குற்றவியல் சட்டத்துறை குற்றங்கள் தொடர்பான வழங்குத் தாக்கலுக்கான ஒழுங்குமுறை திருத்தச்சட்டத்தை நேற்றுமுன்தினம் நீதியமைச்சர் ஜெ.ஜெ.செனவிரட்ன நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இதன்மூலம் இலங்கை பிரஜையொருவர் வெளிநாடு ஒன்றில் குற்றச்செயலில் ஈடுபட்டால் அவர்களுக்கான தண்டனையை வழங்கும் சட்டம் அமுலில் இல்லை எனவும் கணினி மத்திய நிலையங்கள்மூலம் ஏற்படுகின்ற குற்றச்செயல்களை மேற்படி திருத்தச் சட்டத்தின்மூலம் தடுத்து நிறுத்தமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஹற்றன் நகர நுழைவாயில் சோதனை சாவடிகள் பலப்படுத்தல்

கண்டி

ஹட்டன் நகரின் நுழைவாயில் பகுதிகளில் பொலிஸ் சோதனை சாவடிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு, கண்டி, நுவரெலியா ஆகிய பகுதிகளில் இருந்து உள்நுழையும் வாகனங்களையும், பயணிகளையும், சோதனையிடுவதற்காக ஹட்டன் மல்லியப்பூ சந்தியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் சோதனை சாவடியில் மேலதிக பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொகவந்தலாவ, மஸ்கெலியா, நோட்டன் ஆகிய பகுதிகளில் இருந்து செல்லும் வாகனங்களையும், பயணிகளையும் சோதனையிடும் வகையில், டிக்கோயா - அலுத்கால பாலத்துக்கு அருகாமையிலும் பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் இத்தகைய நடவடிக்கையால் ஹட்டன் நகருக்கு செல்லும் பொதுமக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரிகா மீதான வழக்கு இன்று விசாரணைக்கு!

கொழும்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராகத் தொடரப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பிரதம நீதியரசர் தலைமையிலான 3 நீதிபதிகள் கொண்ட குழுவின் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வரவுள்ளது. முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகளைக் குறைக்குமாறு ஆணை பிறப்பிக்கக்கோரி 3 மூத்த வழக்கறிஞர்களால் இந்த வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நீதிபதிகளில் 4பேர் இதில் இருந்து விலகிக்கொண்டனர். கலாநிதி ஷிரானி பண்டாரநாயக்க, நிகால் ஜெயசிங்க, காமினி அமரதுங்க, மற்றும் ரீ.பீ.வீரசூரிய ஆகிய நீதிபதிகள் இதிலிருந்து விலகியதன் காரணமாக இந்தவழக்கு விசாரணை 2 நாட்களுக்கு பிற்போடப்பட்டது.

ஜனாதிபதி உரிமைச் சட்டமூலத்துக்குப் பாதகமான விதத்தில் முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகளை ரத்துச்செய்யுமாறு உயர் நீதிமன்றிடம் மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்சமாமுக்கு முதுகுவலி வெளிநாட்டில் சிகிச்சை!

கராச்சி

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டன் இன்சமாம் உல்-ஹக் முதுகு வலி காரணமாக இந்தியாவுக்கு எதிராக கராச்சியில் நடைபெற்ற 3 ஆவது டெஸ்டில் விளையாடவில்லை.

இதனால் யூனுஸ்கான் கப்டனாக பணியாற்றினார்.

இன்சமாமுக்கு முதுகுவலிப் பிரச்சினை அடிக்கடி ஏற்படுகிறது. இதனால் வெளிநாடு சென்று சிகிச்சைபெற அவர் முடிவு செய்துள்ளார்.

இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் சகாரியர்கான் கூறியதாவது -

முதுகு வலி என்பது இன்ச மாமுக்கு பழைய பிரச்சினைதான். சில பயிற்சிகள் மூலம் இதை நிவர்த்தி செய்யலாம். முதுகுவலியால் அவரை விளையாடவேண்டாம் என்றும் டொக்டர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதன்காரணமாக சிறந்த வெளிநாட்டு நிபுணரிடம் சென்று அவருக்கு முதுகுவலிச் சிகிச்சை அளிக்கலாம் என்று ஆலோசித்து வருகிறோம் எனஅவர் தெரிவித்தார்.

இதேவேளை, இன்சமாம் வெளிநாடு சென்று முதுகுவலிக்கு சிகிச்சை பெற்றால் இந்தியா வுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் ஆட மாட்டார்.

இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இடையேயானஒரு நாள் தொடர் எதிர்வரும் 6-ந்தேதி தொடங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ராவிட் வழங்கிய ஆலோசனைகளை அவருக்கு எதிராக பயன்படுத்தினேன்!

பைசல் இக்பால் தெரிவிப்பு

கராச்சி

ராவிட் வழங்கிய ஆலோசனையை அவர்களுக்கு எதிராகவே பயன்படுத்தியதாக பாகிஸ்தான் வீரர் பைசல் இக்பால் தெரிவித்தார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கராச்சியில் நடைபெற்ற 3 ஆவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வீரர் பைசல் இக்பால் சதமடித்தார்.

முதுகுவலி காரணமாக இன்சமாம் ஆடாதால் மூன்றாவது டெஸ்ட்டில் விளையாடக் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்ட இவர், இந்தியப் பந்துவீச்சா ளர்களுக்கு சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தார்.

பைசல் இக்பால் சதமடிப்பதற்கு இந்திய அணித் தலைவர் ராவிட் வழங்கிய ஆலோசனையே காரணமாக இருந்ததாக ஆச்சரியமான தகவல் வெளியாகியுள்ளது.

டெஸ்ட் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் லாகூரில் நடைபெற்ற பயிற்சி ஆட்டத்தில் பைசல் இக்பால் 87 ஓட்டங்களைக் குவித்தார். அப்போது அவரைப் பாராட்டிய ராவிட், சில துடுப்பாட்ட நுணுக்கங்களையும், ஆலோசனைகளையும் வழங்கினார். இந்த ஆலோசனையால் சதமடிக்க முடிந்ததென்று அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக பைசல் இக்பால் கூறும் போது -

ராவிட் வழங்கிய இரகசிய ஆலோசனையை அவர்களுக்கு எதிராகவே பயன்படுத்திவிட்டேன் என்றார்.

பாகிஸ்தான் அணியின் முன் னாள் தலைவர் ஜாவிட் மியாண்டட்டின் மருமகனான இக்பால் - மியாண்டட் பற்றிக் கூறும்போது -

எனது மாமாவிடமிருந்து ஏராளமான விடயங்களைக் கற்றுக்கொண் டேன். அவர் எனக்கு எப்போதும் உதவியாக இருப்பார். கடினமாக உழைத்தால் அணியில் இடம்பெற முடியும் எனக் கூறுவார்.

எனது திறமையைப் பயன்படுத்தித்தான் அணியில் மீண்டும் இடம் பெற்றேன் எனத் தெரிவித்தார்.



இந்தியாவுடனான டெஸ்ட்டை கைப்பற்றிய பாகிஸ்தான் அணி கிண்ணத்துடன்.....!

நீச்சலில் உலகசாதனை!

சிட்னி

மெல்பேர்னில் நடைபெற்ற அவுஸ்ரேலிய தேசிய நீச்சல் போட்டியில் மகளிர் 100 மீற்றர் ஃப்ரீஸ்டைல் பிரிவில் - லிபிலென்டன் உலக சாதனை படைத்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் 20 வயது லென்டன் 53.42 விநாடிகளில் பந்தயத் தூரத்தை நீந்திக் கடந்து சாதனை புரிந்தார்.

இதற்கு முன்னர் 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் ஜோடை ஹென்றி 53.52 விநாடிகளில் நீந்தியதே உலக சாதனையாக இருந்தது.

ஒட்டுமொத்த அணியுமே தோல்விக்குக் காரணம்!

என்கிறார் ராகுல் ராவிட்



கராச்சி

ஒட்டுமொத்த அணியினரின் ஆட்டமே தோல்விக்குக் காரணம் என இந்திய அணியின் கப்டன் ராகுல் ராவிட் கூறினார்.

கராச்சியில் புதன்கிழமை முடிவுற்ற 3 ஆவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் 341 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வென்றது பாகிஸ்தான்.

பரிசளிப்பு நிகழ்ச்சியில் ராவிட் கூறியதாவது -

முக்கியத்துவம் வாய்ந்த போட்டிக்கு, சிறந்த 11 வீரர்களே தேர்வு செய்யப்பட்டு களமிறங்கினோம். ஆனால், தோல்வி வித்தியாசத்தைப் பார்த்தால் துடுப்பாட்ட வரிசை குறித்து சிந்திக்கத் தோன்றுகிறது.

3 வேகப்பந்து வீச்சாளர்களைக் கொண்டு பாகிஸ்தான் அணியை எதிர்கொண்டோம். அவர்கள் மேலும் சிறப்பாகப் பந்து வீசியிருக்க வேண்டும். அதேபோல் முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தானை 245 ஓட்டங்களில் ஆட்டமிழக்கச் செய்தபோது, துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக ஆடி, அணிக்கு வலிமை சேர்த்திருக்க வேண்டும்.

பாகிஸ்தான் அணியில் முகமட் ஆசிப் 2 இன்னிங்ஸிலும் சிறப்பாக ஆடினார். இந்தியத் தரப்பில் யுவராஜ் சிங்கின் ஆட்டம் மட்டுமே 2 ஆவது இன்னிங்ஸில் அணிக்கு சிறப்புச்சேர்த்திருந்தது என்றார் ராவிட்.

இந்தியாவுடனான டெஸ்ட்

ஓட்டங்களைக் குவிப்பதில் யுனுஸ்கான் முன்னிலையில்



கராச்சி

இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளிடையேயான கடைசி டெஸ்டில் பாகிஸ்தான்வென்று 1-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. இந்த டெஸ்டில் யூனுஸ்கான் 553 ஓட்டங்கள் குவித்து ஓட் டக் குவிப்பில் முதலிடம் பிடித்தார். இதில் இரண்டு சதங்களும், இரண்டு அரைச்சதங்களும் அடங்கும். அவரது அதிகபட்ச ஸ்கோர் 199 ஆகும்.

அவருக்கு அடுத்த இடத்தில் முகமட் யூசுப் உள்ளார். அவர் 461 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 3 ஆவது இடத்தை ஷேவாக் 294 ஓட்டங்களை எடுத்து கைப்பற்றினார்.

பந்து வீச்சில் சகீர்கான் 2 டெஸ்டில் விளையாடி 10 விக்கெட்டுக்களை வீழ்த்தி முதலிடம் பிடித்தார். இதில் சிறந்த பந்து வீச்சு 4-61 ஆகும். அவருக்கு அடுத்த இடத்தில் ஆர்.பி.சிங்கும், ரசாக் கும் தலா 9 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி 2 ஆவது இடத்தைப் பிடித்தனர்.

ஐ.சி.சி தர வரிசைப் பட்டியலில் அவுஸ்ரேலிய அணி ஆதிக்கம்

டுபாய்

சர்வதேச ஒருநாள் கிரிக்கட் போட்டியின் அடிப்படையில் அணிகள் மற்றும் வீரர்களின் தர வரிசைப் பட்டியலை ஐ.சி.சி வெளியிட்டுள்ளது.

இதில் அவுஸ்ரேலியா தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. அந்த அணி மொத்தம் 133 புள்ளிகள் பெற்றுள்ளது.

தென்னாபிரிக்க அணி (119 புள்ளிகள்) 2 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் அணி (116 புள்ளிகள்) 3 ஆவது இடத்திலும், நியுசிலாந்து அணி (112 புள்ளிகள்) 4 ஆவது இடத்திலும், இந்திய அணி (109 புள்ளிகள்) 5 ஆவது இடத்திலும் உள்ளன. இங்கிலாந்து, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே, பங்களாதேஷ் அணிகள் முறையே 6 முதல் 10 இடங்களைப் பிடித்துள் ளன.

துடுப்பாட்ட வரிசைப் பட்டியலில் அவுஸ்ரேலிய அணியின் கப்டன் ரிக்கி பொண்டிங் 803 புள்ளிகள் பெற்று முதல் இடத்திலுள்ளார். கில்கிறிஸ்ட் (அவுஸ்ரேலியா), சிமித் (தென்னாபிரிக்கா), சைமன்ஸ் (அவுஸ்ரேலியா), முகம்மட் யூசுப் (பாகிஸ்தான்), கெய்ல் (மேற்கிந்தியா), இன்சமாம் (பாகிஸ்தான்), சங்ககார (இலங்கை), கிளார்க் (அவுஸ்ரேலியா), ஆகியோர் முறையே 2 முதல் 9 இடங்களில் உள்ளனர்.

இந்திய வீரர்களில் ராவிட் மட்டும் முதல் 10 இடங்களுக்குள் உள்ளார். ராவிட் மொத்தம் 702 புள்ளிகள் பெற்று 10 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

பந்து வீச்சில் அவுஸ்ரேலிய வீரர் மெக்ராத் 829 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளார். பிரட்லீ (அவுஸ்ரேலியா), பொலக் (தென்னாபிரிக்கா), முரளிதரன் (இலங்கை), நவீட் (பாகிஸ்தான்), வாஸ் (இலங்கை), விற்றோரி (நியூஸிலாந்து) ஆகியோர் முறையே 2 முதல் 7 இடங்களில் உள்ளனர். இந்திய வீரர் இர்பான் பதான் 697 புள்ளி களுடன் 8 ஆவது இடத்தை பிடித்துள்ளார். தென்னாபிரிக்க வீரர் என்ரினி 9ஆவது இடத்திலும், நியூஸிலாந்து வீரர் ஷேன் பொண்ட் 10 ஆவது இடத்திலும் உள்ளனர்.

சிறந்த சகலதுறை ஆட்டக்காரர் பட்டியலில் இங்கிலாந்து வீரர் பிளின்ரொப் (4524 புள்ளிகள்) முதல் இடத்தில் உள்ளார். தென் னாபிரிக்க வீரர் பொலக் (3812 புள்ளிகள்) 2 ஆவது இடத்தி லும், அவுஸ்ரேலிய விரர் சைமன்ஸ் (3811) 3ஆவது இடத்திலும், பாகிஸ்தான் வீரர் சொகைப் மலிக் (3600) 4 ஆவது இடத்திலும், மேற்கிந்திய வீரர் கெய்ல் (3453) 5ஆவது இடத்திலும் உள்ளனர்.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக கிண்ண கிரிக்கட் போட்டி

சென்னை

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி வரும் ஞாயிறன்று இலங்கையில் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை, அவுஸ்ரேலியா, பாகிஸ்தான், நியூஸிலாந்து, பங்களாதேஷ் உட்பட 15 அணிகள் பங்கேற்கும் இந்தப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி இந்த மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறும்.

2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டியில் இந்தியா கிண்ணத்தை வென்றது. இந்தப் போட்டியில் அவுஸ்ரேலியா இருமுறை கிண்ணத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

இரவுநேர அம்புலன்ஸ் சேவை தொலைபேசி இலக்கங்கள் மாற்றம்

யாழ்ப்பாணம்

கடும் சுகவீனமுற்ற நோயாளர்களை இரவுநேரங்களில் வீடுகளுக்குச்சென்று அம்புலன்ஸ் வாகனங்கள்மூலம் ஏற்றிவருவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக - சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

கடும் சுகவீனமுற்ற நோயாளர்களை இரவு நேரங்களில் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்வதில் தனியார் வாகனங்கள் பாதுகாப்பற்றுள்ளதால் - பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்.பாதுகாப்பு தலைமையகத்திடமிருந்து பின்வரும் வைத்தியசாலைகளின் அம்புலன்ஸ் வாகனங்களுக்கு இரவு நேரத்தில் மாத்திரம் வீடுகளுக்குச்சென்று நோயாளர்களை ஏற்றிவர அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கீழ் தரப்பட்ட தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அண்மையிலுள்ள வைத்தியசாலையின் அம்புலன்ஸ் சேவையைப் பெறலாம்.

மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை 226 3530, மாவட்ட வைத்தியசாலை சாவகச்சேரி 222 8479, சுற்றயல்கூறு சங்கானை 222 5477, மாவட்ட வைத்திய சாலை தெல்லிப்பளை 060221 2614 -

மாவட்ட வைத்தியசாலை ஊர்காவற்துறை 0602213660, சுற்றயல் கூறு காரைநகர் 222 5556, கிராமிய வைத்தியசாலை வட்டுக்கோட்டை 0602213582, ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை 226 3261, 226 3262, கிராமிய வைத்தியசாலை மருதங்கேணி 060221 3580, கிராமிய வைத்தியசாலை வேலணை 060 2213570, சுற்றயல் கூறு அச்சுவேலி 226 3152.

கடந்த 1 ஆம் திகதி வெளியாகிய இது தொடர்பான செய்தியில் தரப்பட்ட தொலைபேசி இலக்கங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதால் இதைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பிரதான வீதியில் மாலைநேரத்தில் மீன்சந்தை!

பண்டத்தரிப்பு

பண்டத்தரிப்பு பிரதான வீதியில் மாலைநேர மீன் வியாபாரம் அதிகரித்துவருவதால் அந்தப்பகுதியில் பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மாலை நேரங்களில் 4.45 மணியளவிலேயே வியாபாரம் ஆரம்பமாகி இரவு 8 மணிவரை இடம் பெற்றுவருவதால் இந்தப் பகுதியால் செல்பவர்கள் இடநெருக்கடிகளை சந்திக்கவேண்டிவருகிறது.

மீன் வியாபாரிகள் மீன் கழிவுகளை அந்த இடத்திலேயே விடுகின்றனர்.

இதனால் குறித்த இடத்தில் கட்டாக்காலி நாய்களும் அதிகரித்துவருகிறது.

இவற்றின் சண்டைகளாலும் மற்றும் இந்தப்பகுதியில் உள்ள கடைகளுக்கு முன்னால் வியாபாரம் செய்வதால் அந்தப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுவதாலும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



கடந்த ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவில் இடம்பெற்ற குறைமுறையிடுதல் நிகழ்ச்சியில் யாழ்.மேலதிக அரச அதிபர் எஸ்.சிவசுவாமி உரையாற்றுவதையும், யாழ்.அரச அதிபர் க.கணேஷிடம் புங்குடுதீவு சர்வோதய இயக்கப் பிரதிநிதி மகஜர் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

கோண்டாவிலில் மின்தடை பாவனையாளர்கள் சிரமம்!

கோண்டாவில்

கோண்டாவில் வடக்குப்பகுதியில் அடிக்கடி ஏற்படும் மின்தடைகளால் பாவனையாளர்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

குறிப்பாக இரவு வேளைகளில் மின்விநியோகம் தடைப்படும் போது அந்தப் பகுதிக்கான இயந்திர இயக்குனருக்கு அந்தப்பகுதிமக்கள் தொலைபேசிமூலம் தெரியப்படுத்தும்போது அவர்கள் வருகைதரமறுப்பதாகவும், இதனால் அந்தப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் கெடுபிடிகளுக்கு பயந்து மின்சார நிலையத்தின் இயந்திரத்தை பொதுமக்களே இயக்கி மின்சாரத்தை வழங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக குறித்த பகுதிகளில் மின்விநியோகம் தடைப்படும்போது, அதனைச் சீர்செய்வதற்கு மின்சார சபையினரும், அரச அதிகாரிகளும் உரிய நேரத்தில் வருகைதந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். (82)

கிரிக்கெட் ரசிகர்களின் செயலால் கோண்டாவில் பகுதியில் பதற்றம்

கோண்டாவில்

விளையாட்டு ரசிகர்கள் சந்தோசத்தை வெடிகொளுத்திக் கொண்டாடியதால் கோண்டாவில் - உரும்பிராய் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலுள்ள பொதுமக்களிடையே பெரும் பதற்றமும் பீதியும் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்கிழமை இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:- நடைபெற்றுவரும் கிரிக்கெட்போட்டிகளின்போது இடம் பெற்ற இலங்கை -தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையேயான போட்டியை தொலைக்காட்சியில் பார்த்துவிட்டு இலங்கை அணியினரின் தோல்வியை எதிர்கொண்ட ரசிகர்கள் தமது மகிழ்வுக்களிப்புக்காக இரவுவேளையில் சந்திகளில் கூடிநின்று சீன வெடிக்கோர்வைகளை வெடிக்கவைத்ததால் கோண்டாவில் - உரும்பிராய் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மத்தியில் மத்தியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

படையினர்தான் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்ப்பதாக எண்ணிய பொதுமக்கள் வெளியே வராது வீடுகளுக்குள்ளேயே முடங்கினர்.

குடாநாட்டில் பொதுமக்கள் மத்தியில் இப்போது வெடிச்சத்தங்கள் கேட்டதும் பீதியுணர்வே ஏற்படுகிறது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக இத்தகைய செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர். (82)

சின்னஞ்சிறு செய்திகள்

மொத்த விற்பனை நிலையம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் மொத்த விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இந்த மொத்த விற்பனை நிலையத்தில் அரிசி, மா போன்ற அத்தியாவசியமான பொருள்களைக் கொள்வனவு செய்யலாம் என மேற்படி கூட்டுறவுச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

மெய்வல்லுநர் போட்டி

தெல்லிப்பளை

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளைமறுதினம் காலை 9.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.புண்ணியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் -

முன்னாள் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.நாகமணி பிரதம விருந்தினராகவும், சிறப்புவிருந்தினராக தெல்லிப்பளைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கைலாசநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மகா கும்பாபிஷேக பெருவிழா

அராலி

அராலி மேற்கு வட்டியவத்தை ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் பெருமான் ஆலய மஹாகும்பாபிஷேகப் பெருவிழா கர்மக் கிரியைகள் இன்று காலை நடைபெறவுள்ளது. எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 8 மணி முதல் 6 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறும். மறுநாள் காலை 8.20 மணிக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

அதிபர் பதவி வெற்றிடம் நிரப்பல்

யாழ்ப்பாணம்

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட நடேஸ்வராக்கல்லூரியில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புவர்கள் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்குமுன் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு - யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.



மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கிருபா வீரசிங்கம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகரனை மூன்று

பெயர் : சதீஸ் சாயிஷன்
முகவரி : மயிலங்காடு

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
கற்பனைகள் பதிக்கும், புனைபடமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

நியாப் திட்டத்தின்கீழ் அபிவிருத்திப் பணிகள்

நவாலி

நியாப் திட்டத்தின்கீழ் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு வலி.தென்மேற்கு பிரதேசத்தில் நவாலி கிழக்கு, சில்லாலை தெற்கு ஆகிய இரு கிராமங்கள் மையக் கிராமங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

சில்லாலை தெற்கில் பல லட்சம் ரூபா செலவில் பொது மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது.

அத்துடன் அம்மன் வீதி, சென். ஜேம்ஸ் வீதி, பண்ணாகம் வீதி, கொட்டைக்காடு வீதி, தும்பளைக் குளம் என்பன புனரமைக்கப்படவிருக்கின்றன. அத்துடன் மேலும் 3 பொதுக்கிணறுகளும் அமைக்கப்படவிருக்கின்றன.

நவாலி கிழக்கில் தாய் சேய் நிலையமும் பொதுக்கிணறு ஒன்றும் அமைக்கப்படவிருக்கிறது. அத்துடன் சின்னப்பா வீதி, பிரசாத் வீதி, சம்பந்தப் பிள்ளையார் வீதி, ஞானவைரவர் வீதி ஆகியனவும் புனரமைக்கப்படவிருக்கின்றன. (44)

பொதுமக்கள் நன்மைகருதி தண்ணீர் தாங்கி அமைப்பு!

பண்டத்தரிப்பு

சாந்தை கிராமத்தில் வசிக்கும் மக்களின் நன்மைகருதி வலி. தென்.மேற்கு பிரதேச சபையால் 5 குடிதண்ணீர் தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.

இந்தப்பகுதி மக்கள் குடிநீரைப் பெறுவதிலுள்ள கஷ்டங்கள் குறித்து பிரதேச சபைக்கும், பிரதேச செயலருக்கும் தெரிவித்ததையடுத்து பிரதேச சபையால் இந்த வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, குடிநீர் தொட்டிகளுடன் இணைக்கப்பட்டிருந்த தண்ணீர் குழாய்கள் சில விசமிகளால் சேதமாக்கப்பட்டதைத் தொடர்ந்து, இது போன்ற சம்பவங்கள் இடம்பெறாத வண்ணம் இவற்றைப் பாதுகாப்பதற்கு இந்தப்பகுதி மக்கள் முன்வர வேண்டும் என்று தெரிவித்த செயலாளர் - குடிநீரைப் பெறும் ஒவ்வொரு குடும்பமும் ஒருநாளைக்கு ஒரு ரூபா வீதம் மாதம் 30 ரூபா செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (44)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி கையளிப்பு!

மூளாய்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நீண்டகாலமாக நிலவிவந்த அம்புலன்ஸ் வண்டி வசதியீனம் தற்போது வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் முயற்சியின் பயனால் நீக்கப்பட்டது.

அம்புலன்ஸ் வண்டியை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் கடந்த திங்கட்கிழமை தமது அலுவலக வளாகத்தில் வைத்து மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையின் தலைவர் வி.வேலுப்பிள்ளையிடம் சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தார்.

அம்புலன்ஸ் வண்டி கிடைத்ததால் இந்தப்பகுதி மக்களுக்கும், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளருக்கும் இது வரப்பிரசாதமாக அமைந்துள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார். (44)

சிகரங்களைத் தொட்ட பின்னும்

நான்கு சுவருக்குள் அடைபட்டு கிணற்றுத் தவளைகாகப் பெண்கள் இருந்த காலம் மாறி பெண்களும் ஆண்களைப் போல சம அந்தஸ்தில் உயர்ந்து விட்டனர். எழுத்துத் துறை, ஆசிரியத் தொழில், வைத்தியத்துறை என்று படிப்படியாக முன்னேறிய பெண்கள் இன்று விமான ஓட்டியாக, விண்வெளி வீராங்கனைகளாக சமூகத்தில் உயர்ந்து விட்டனர். பல நாடுகளில் பெரிய உத்தியோகத்தில் இருக்கும் பெண்களின் கீழ் பல ஆண்கள் அவர்களின் ஊழியர்களாக கடமை புரியும் காலம் சாதாரணமாகிவிட்டது.

இன்று பல பெண்கள் தம் எதிர்காலத்தில் நல்ல உத்தியோகம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே அயராது தமது படிப்பை தொடர்கிறார்கள். அவர்களில் பலர் பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகளை பெற்று தமது இலட்சியங்களை தொட்டு விடுகின்றார்கள்.

பொதுவாக நோக்கும் போது பெண்களுக்கு மிகவும் இலகுவான தொழில் ஆசிரியர் தொழிலே. ஆசிரியர்கள் மூலமாகவே இன்றைய சமூதாயம் ஒரு நல்ல நிலையை எட்டி வேரூன்றி இருக்கின்றது. சில பெண்கள் நாம் படிக்கும் காலங்களில் பணம் ஒரு பிரச்சினையாகவும், தடைக்கல்லாகவும் இருந்தமையால் எம்மால் படித்து நல்ல நிலையை அடைய முடியவில்லையே என ஏங்கி நாள் தோறும் கண்ணீரில் காலம் நகர்த்துவார்கள்.

ஒருவர் பாடசாலைக்குப் போய் படித்து பரீட்சைகளில் சித்தி அடைந்து விட்டால் மட்டும் தான் எதிர் காலத்தை இன்பமாக கொண்டு போக முடியும் என்பது மிகவும் மூடத்தனமான கொள்கை. வீட்டில் இருக்கும் பெண்கள் பலர் தையல் வேலை, வூல் பின்னுதல் மற்றும் பொம்மைகள் தயாரித்தல், பூக்கொத்துகளை செய்து வடிவமைத்தல் போன்றவற்றில் ஈடுபட்டு மிக அருமையாக முன்னேறி இருக்கின்றார்கள் என்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

தமக்குத் தெரிந்த தையல் வேலை, பின்னல், மணப்பெண்களை அலங்கரித்தல் போன்றவைகளை திறம்பட கற்று வந்தன் மூலம் எமது எதிர்கால வாழ்வுக்கு படிக்கற்களாக மாற்றிக் கொள்ள முடியும். அதாவது இவற்றை ஏனைய சமூகத்தாருக்கு கற்றுக் கொடுக்கலாம். இவ்வாறு செய்வதால் பிறர் எம்மால் கற்றுக் கொண்டதை இட்டு எமக்குள்ளே சந்தோசம் குடிகொள்வதுடன் அவர்களுக்கும் இது பற்றிய அறிவு கிடைக்கிறது. மேலும் அவர்கள் மனதில் திருப்தியும், மன நிறைவும் உண்டாகின்றது.

சில ஆண்களுக்கு மணமகள் தேடும் போது நன்கு படித்த, உத்தியோகம் பார்க்கும், அழகான பெண்களைத் தமது வாழ்க்கைத் துணையாக தேடிக் கொள்வார்கள்.

இப்படிப்பட்ட மணமகளை மணந்து கொள்ளும் சில கணவன்மார்கள் தமது மனைவிமார்களை அவர்களை செய்து வந்த தொழிலைக் கை விடும்படி வற்புறுத்துவார்கள். பல போராட்டங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் மத்தியில் தங்கள் கணவன்மார்களுக்கு கட்டுப்பட்டு இந்த அப்பாவிப் பெண்கள் தமது தொழிலை கைநழுவச் செய்து விடுகிறார்கள். கணவன் மனைவி இருவரும் சேர்ந்து தொழில்பார்க்கும் போது வாழ்வில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை இதன் மூலம் ஈடு செய்துகொள்ளலாம் என்பதை ஏனோ சில கணவன்மார் புரிந்து கொள்வதில்லை.

இப்படிப்பட்ட ஆண்கள் படித்து தொழில் புரியாத மணமகளை வாழ்க்கைத் துணையாய் தேர்ந்தெடுப்பதில்லை.

படித்தால் மட்டும் தான் புரிந்துணர்வும், அனுபவமும் ஏற்படுகின்றது என்பது இவர்களின் வாதம் போலும். அதற்காக படிக்காமல் வீட்டில் முடங்கிக் கிடக்கத்தான் வேண்டும் என்று சொல்ல வரவில்லை.

படித்து உத்தியோகம் பார்க்கும் பெண்களை மணமுடித்து பின்னர் இவர்களை வேலைகளில் இருந்து வேலை நிறுத்தம் செய்வது எந்தளவு நியாயம்? இவர்கள் படிக்கும் போது என்னென்ன கற்பனைகளில் படித்து முன்னுக்கு வந்திருப்பார்கள்... அதன்போது அவர்கள் பட்ட இன்னல்கள் சொல்லில் அடங்காதவைகளாக இருக்கலாம். இப்படி முயன்று படித்து அதற்கேற்ற தொழிலை மிகவும் சிரமப்பட்டு தேர்ந் தெடுப்பதை மிகவும் சுலபமாக ஒரு சில வார்த்தைகளிலேயே சில கணவன்மார் புறக்கணித்து விடுகிறார்கள். அவர்களுக்கு தொழில் புரியாத மனைவி தான் வேண்டுமென்றால், ஏன்? வறுமையின் காரணத்தால் படிப்பை இடை நிறுத்திய பெண்களை தேர்ந்தெடுக்கலாமே. இப்படிச் செய்வதனால் ஏழைகளுக்கும் வாழ்வளித்த உன்னதமான அந்தஸ்தை பெறமுடியும்.

உத்தியோகம் பார்க்காத படிப்பை இடைநிறுத்திய பெண்கள் எல்லோரும் புரிந்துணர்வு இல்லாத ஜடங்கள் அல்ல என்பதை இப்படிப்பட்ட ஆண்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சொந்த தொழில் புரியும் பெண்களை ஆண்கள் தமது சுய கௌரவத்துக்காக அவர்களின் தொழில்களை செயலிழக்கச் செய்வது அபத்தமான செயல்களேயாகும்.

ஆண்களுக்குள்ளும், பெண்களுக்குள்ளும் சில சமயங்கள் சுயகௌரவப் பிரச்சனை தலைகாட்டத் தொடங்கத்தான் செய்யும். அதற்காக பெண்கள் ஆண்களையோ, ஆண்கள் பெண்களையோ பாதிக்காது நடந்து கொள்வது அவசியமாகும். தங்கள் கௌரவங்களுக்குமுன் பிறர் செய்யும் தொழில்கள் ஒரு பிரச்சினையல்ல என்பதை ஒவ்வொருவரும் தங்கள் மனதில் தடம் பதித்துக் கொள்ள வேண்டும்.

*

காலம் பொன்னானது

காலம் என்பது பொன் போன்றது என்று சொல்வார்கள். அதனால் காலத்தை வீணடிக்கும் ஒவ்வொரு வினாடியும் எங்களுக்கு நஷ்டத்தையே நிச்சயம் கொண்டு வந்து விடும். இழந்து விட்ட காலத்தை எந்தச் சக்தியாலும் திரும்பபெற முடியாது என்பது யாவரும் அறிந்த உண்மை. அதனால் கிடைக்கும் காலத்தை பயனுள்ள வகையில் கழித்து வெற்றி காண்பதே புத்திசாலித்தனமாகும்.

காலம் என்று சொல்லும் போது அதில் நேற்று இன்று நாளை என்ற மூன்றும் அடங்குகின்றன. நேற்று என்பது எங்களிடமிருந்து விடைபெற்று விட்டதாகும். நாளை என்பது சந்தேகமானது. நம் கண்முன்னே இருப்பது தான் இன்றைய தினமாகும். இருக்கிற இன்றைய பொழுதுதான் எமது வாழ்க்கையின் முக்கிய கட்டமாகும். அதனால் இன்றைய பொழுதை மனித சமூகம் தவற விடக்கூடாது. இன்று நாம் நன்றாக வாழ்ந்தால் தான் நேற்று நாம் செய்த வேலைகளுக்கு பலனும், மதிப்பும் கிடைத்து விடலாம். அதே போல இன்றைய பொழுதை சிறப்பாக கழித்தால் தான் நாளைய பொழுது சிறப்பாக அமையலாம். அதனால் இன்றைய தினத்தை இனிமையாக கழித்து விட முற்படுவது ஏற்றமாகாது. இன்றைய பொழுதை வீணாகக் கழித்தவர்கள் நாளைய பொழுதின் போது நேற்றைய தினத்தை நாம் வீணடித்து விட்டோமே என்று மனம் வருந்துவதில் எந்தவித பயனுமில்லை. இன்றைய தினத்தை பயன்படுத்தாமல் நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று கருதுகிறவர்கள் வாழ்க்கையில் அடைய வேண்டிய பல வெற்றிகளை இழந்து விடுகின்றனர்.

இன்று நாம் சிறப்புடன் வாழ வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு நாளும் இருப்பின் அவர்கள் எந்நாளும் சிறப்புடன் வாழுகிறார்கள் என்பது தான் பொருள்.

தினமும் காலையில் விழித்தெழும் போது ஆனந்தமாகவும், உற்சாகமாகவும் கடவுளை நினைத்தவராக, அவரின் அருளை வேண்டியவராக, நல்ல எண்ணங்களுடன் எழுதல் வேண்டும். கடவுளின் அருளால் இன்றைய பொழுது தனக்கு வெற்றி நிறைந்த பொழுதாக அமைய வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் எழுதல் வேண்டும்.

இந்த மேலான வாழ்க்கையை தினமும் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும். அதன் பின்னரே நாளாந்த கடமைகளை ஆரம்பிக்க வேண்டும். நாட்கள் உருண்டோடுகின்றன.

இப்படியாக கழிந்து செல்லும் ஒவ்வொரு நாளையும் எப்படி கழிக்க வேண்டும் என்பதை முதலில் நாம் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். ஏனெனில், திட்டமிட்டு மேற்கொள்ளப்பாடாத எந்தச் செயல்களும் வெற்றி பெறும் என்பது சந்தேகமானது.

எம்மில் பலர் இன்று நாம் செய்ய வேண்டிய வேலைகள் அதிகம் உள்ளன. அப்பப்பா..... இத்தனை வேலைகளையும் நாம் எங்கே, எப்போது, எப்படி செய்து முடிப்பது என்று தலையில் கையை வைத்து சிந்திக்கின்றனர்.

இது அவர்களின் மன உறுதியின் பலவீனத்தை காட்டுகின்றது. அவ்வாறின்றி அதற்குப் பரிகாரமாக நாம் மேற் கொள்ளும் ஒவ்வொரு வேலையும் வரிசைப்படுத்திக் கொள்ள வேண்டும். இதன்படி எப்போது எதைச் செய்து விடவேண்டும் என்று எண்ணுகிறோமோ, அப்போதே அதைச் செய்து முடிக்க- பழகிக் கொள்ள வேண்டும். கடவுளின் போம் என்றெல்லாம் சொல்லி நாட்களை கழித்து வருகின்றனர்.

இத்தகையவர்கள் முக்கியமான வேலைகளையெல்லாம் தள்ளிவிட்டு ஏதோவெல்லாம் செய்து வருகின்றனர். இவ்விதமாக இவர்கள் ஒவ்வொரு நாளையும் கழித்து வருகின்றனர். இதனால் இவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு பெரிதும் சங்கடப்படுகின்றனர். இதனால் தான் இன்றைய நாளை இனிமையாக கழிக்க முற்படவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லப் படுகிறது.

ஒவ்வொரு நாளும் இரவு நித்தரைக்குச் செல்லும் போது நாம் இன்றைய நாளை நன்மையான விதத்தில் கழித்தோமா அல்லது கடவுளின் விருப்பங்களுக்கு மாற்றமான விதத்தில் செயல்பட்டோமா என்பது பற்றி சிறிது சிந்திக்க வேண்டும். ஏதும் தவறுகள், குற்றங்கள் ஏற்பட்டிருப்பின் அதற்காக வருந்தி கடவுளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இப்படியாக ஒவ்வொரு பொழுதையும் நாம் பயன் தரும் விதமாகக் கழித்து கடவுளின் நல்லருளைப் பெற்றுக் கொள்வோம்.

*

குழந்தைகள் விரும்பும் பொம்மைகள்

குழந்தைகள் எவ்வளவு அழகு. அதைவிட அதன் குறும்புகள் கொள்ளை கொள்ளும் அழகு. குழந்தைகள் விரும்பும் பொம்மைகளோ, நாம் குழந்தையை விரும்புவதற்கு ஈடாக உள்ள பொருளாக இருக்கின்றது. ஆபத்தில்லாத பொம்மைகளை குழந்தைகளுக்கு கொடுத்தால், குழந்தையும் மகிழும். நாமும் மகிழலாம். ஆனந்தத்தை அள்ளி அளிப்பவை இந்தக் குழந்தைகள்.

குழந்தைப் பருவத்தில் ஒவ்வொரு குழந்தையின் வாழ்விலும் முக்கிய இடம் வகிப்பது பொம்மைகள். என்னதான் விலையுயர்ந்த தங்க ஆபரணங்களையோ வெள்ளிப் பாத்திரங்களையோ, குழந்தையின் கையில் கொடுத்தாலும் அவர்கள் முகம் மலர்வதென்னவோ பொம்மைகளைப் பார்த்துத்தான். பிறந்ததுமுதல், மாதங்கள் ஆக ஆக ஒவ்வொரு பருவத்திலும் குழந்தைகள் ஒவ்வொரு விதமான பொம்மைகளை இரசித்து விளையாடி மகிழ விரும்புவார்கள்.

முதல் மூன்று மாதங்கள்

முதல் மூன்று மாதங்களுக்கு உங்கள் குழந்தைக்கு விளையாட பொம்மை எதுவும் தேவையில்லை. இந்தப் பருவத்தில் பெரிய பஞ்சுப் பொம்மையோ, பிளாஸ்ரிக் முயல் பொம்மையோ உங்கள் குழந்தையின் கவனத்தைக் கவருவதில்லை. இந்தப் பருவத்தில் விரும்பும் விளையாட்டுப் பொருள் அதன் பெற்றோர்கள் தான். உங்கள் கண்கள், விரல்கள், முகம், உடைகள், இவற்றையே திரும்பத் திரும்ப உற்றுப் பார்த்து மகிழும்.

தன் பிஞ்சு விரல்களால் உங்கள் முகத்தை வருடி மகிழும். இந்தப் பருவத்தில் உங்கள் குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்ட விரும்பினால், நீங்கள் செய்ய வேண்டியது – குழந்தையை மார்புடன் அணைத்துக் கொண்டு வீட்டை சுற்றிக் காட்டுவது தான். அவ்வாறு செய்தால் குழந்தை தன் கண்களை அகலவிரித்துக் கொண்டு வேடிக்கை பார்க்கும். கிலுகிலுப்பை ஒலி கேட்டு பரவசப்படும். இந்தப் பருவத்தில் குழந்தையை பரவசப்படுத்துபவை படுக்கைக்கு அருகில் ஒட்டப்பட்ட வண்ண சுவரொட்டிகள், உருண்டு செல்லக்கூடிய விளையாட்டுப் பொருட்கள், கிலுகிலுப்பை ஒலி, மெல்லிய இசை, தாய் பாடும் தாலாட்டு.

மூன்று முதல் ஆறு மாதங்கள் வரை

இந்தப் பருவத்தில் உங்கள் குழந்தைக்கு மிகவும் விரும்பி ரசித்து விளையாடும் பொருள் அதன் கை விரல்கள் தான். இந்தப் பருவத்தில் குழந்தை தன் கையைத் தானே திரும்பத்திரும்ப பார்க்கும். விரல்களை மூடித் திறந்து பார்க்கும், மகிழும். கைகளை வேகமாக அசைத்து மகிழும், சமயங்களில் முகத்தை வேகமாக இடித்துக் கொள்ளும். வாயில் விரலை போட்டுப் பழகிக் கொள்வதும் இந்த பருவத்தில் தான். வாயில் விரல் வைக்க ஆரம்பித்துவிடும். இந்த பருவத்தில் பெற்றோர் மிகவும் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். குழந்தைக்கு அருகில் கூர்மையான பொருட்களையோ, விழுங்கக் கூடிய பொருட்களையோ வைக்காமல் கவனமாக இருக்கவேண்டும். இந்தப் பருவத்தில் அவர்களுக்கு ஏற்ற விளையாட்டுப் பொருட்கள் – பிளாஸ்டிக் கரண்டிகள், காற்றடிக்கப்பட்டு வர்ணங்களில் உள்ள பந்து, காற்றடித்த வண்ண பொம்மைகள்.

ஓராண்டு வரை

இந்தப் பருவத்தில் உங்கள் குழந்தை தவழ ஆரம்பிப்பதுடன், சுவரை, மேசையைப் பிடித்துக் கொண்டு நின்று பழக ஆரம்பிக்கும். மேலும் இந்தப் பருவத்தில் குழந்தைக்கு கையும், காலும் எந்த நேரமும் துருதுருவென இருக்கும். எதைக் கொட்டுவது, எதைக் கீழே தள்ளுவது என்ற நினைத்தபடி இருக்கும். இவர்களுக்குப் பிடித்த விளையாட்டு மேசை மேல் உள்ள பொருட்களை சிதறவைப்பதுதான். இந்தப் பருவத்தில் அழகாக உட்காரவும், தன்னைச் சுற்றியுள்ள பொருட்களை வேடிக்கை பார்க்கவும் பழகிக்கொள்ளும். விளையாட்டுப் பொருட்களை சேகரித்து ஒரு பெரிய பிளாஸ்ரிக் கூடையில் போட்டு அவர்கள் கையில் கொடுத்து விட்டால், மிகவும் சுவாரசியமாய் அதைக் கொட்டிக் கவிழ்ப்பது, திரும்ப எடுத்துப் போடுவது என அதிலேயே நேரம் போவது தெரியாமல் விளையாடி மகிழும். நகரக் கூடிய சக்கரம் வைத்த பொம்மைகளை நூல்கட்டி இழுத்து விளையாடி மகிழ்வதும் இந்தப் பருவத்தில் தான். அவர்களைக் கவரக்கூடிய விளையாட்டுப் பொருட்கள்... சக்கரம் பொருத்தப்பட்ட பொம்மைகள், அழுத்தினால் ஓசை தரக்கூடிய பொம்மைகள், மெத்து மெத்தென உள்ள பஞ்சு மெத்தைகள்.

ஒன்று முதல் இரண்டு வயது வரை

இந்தப் பருவத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளும் ஒரே ரசனைத் தன்மை உடையவர்களாகவும், அதற்கு ஏற்றவாறு விளையாட்டுப் பொருட்கள் வைத்துவிளையாட விரும்புபவர்களாகவும் இருப்பார்கள்.

சில குழந்தைகள் பில்டிங் பிளக் வைத்து விளையாட விரும்புவார்கள். இவர்களுக்கு நாய், கரடி போன்ற பொம்மையோ சந்தோஷத்தைத் தராது சில குழந்தைகள் தொலைக்காட்சியைக் கவனித்து இசைக்கேற்ப கைதட்டி ஆடி மகிழும்.

இந்தப் பருவத்தில் குழந்தைகளின் ரசனையைத் தெரிந்து கொண்டு வளர்ப்புச் சூழ்நிலைக்கு ஏற்ப வீட்டுப் பொருட்கள் வாங்கித் தரும் அதேவேளையில், அவசியம் குழந்தைகளின் ரசனை அறிந்து விளையாட்டுப் பொருட்கள் வாங்கித்தரவேண்டும். பொம்மைகளின் முனைகள் கூர்மையானதாக, காயப்படுத்தக் கூடியதாக இருக்கக் கூடாது. ✻

உப்பில்லாப் பண்டமதான் உடல் ஆரோக்கியத்தைத் தரும்

'உப்பு கொஞ்சம் குறைவாக இருக்கு. இன்னும் கொஞ்சம் போடுங்க!' என்று அனைவருமே கூறுவார்கள். உப்பு சேர்த்ததும் சப்புக்கொட்டிச் சாப்பிடுவார்கள்!

காலங்காலமாய் மனிதர்களின் நாக்கில் கம்பீரமாய் அமர்ந்துவிட்ட உப்புதான்... இப்போது, அதே மனிதர்களின் ஆரோக்கியத்துக்கு எமனாகவும் மாறியிருக்கிறது

என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர், உள்ளிட்ட வளர்ந்த நாடுகள், தற்போது மக்களிடம் உப்புப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன. உலக மருத்துவ பத்திரிகைகள் பலவும் உப்புக்கு எதிரான எச்சரிக்கைக் கட்டுரைகளை எழுதத் தொடங்கி உள்ளன.

'உலகம் முழுவதும் மாரடைப்பால் நிகழும் மரண எண்ணிக்கை, சிறுநீரகக் கோளாறு, ரத்த அழுத்தம், நீரிழிவு தொடர்பான நோய்கள் அதிகரித்து வருவதற்கும் முக்கியகாரணம் உப்புத்தான்' என்று மருத்துவர்கள் அடித்துச் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

ஆதிகாலத்தில் வேட்டையாடுதல், போர் செய்தல் என்று வாழ்ந்த மனிதர்களுக்கு சோடியம் உப்பின் அறிமுகம், ஒரு புதிய அனுபவத்தைத் தந்தது. அப்புறம், அது தேவையாகவும் மாறிவிட்டது.

உடல் உழைப்பைப் பிரதானமாகக் கொண்ட அன்றைய வாழ்க்கை முறையால், உடலிலிருந்து நிறைய வியர்வை வெளியேறியது. இதனால் இரத்தத்தில் இருந்த சோடியம் உப்பின் சமநிலை அடிக்கடி குறைந்தது. போர்க்களத்தில் உடல் சோர்ந்து விழுவார்கள் வீரர்கள். அந்தச் சமயங்களில் அவர்கள் கையில் உப்புக் கட்டிகள் தான் கொடுக்கப்பட்டன. உப்பை நாக்கில் வைத்த உடனேயே அவர்கள் பழையபடி உற்சாகம் பெற்று எழுவார்கள். இதனால் அந்தக் காலங்களில் உப்பு, தங்கத்தை விட உயர்ந்ததாகக் கருதப்பட்டது. இப்படி, பழங்காலத்தில் பிரமாண்டமான வரவேற்போடு மனித வாழ்க்கையில் நுழைந்த சோடியம் உப்புதான். இப்போது அதே மனித இனத்துக்கு விஷமாகவும் மாறியிருக்கிறது' எப்படி ஏற்பட்டது இந்த மாற்றம்? என்பதைச் சற்று விரிவாகவே பார்த்தால்;

'மனித உடலுக்கு மிக அடிப்படையாக, நான்கு வித உப்புகள் தேவை, அவை பொட்டாசியம், மக்னீசியம், கல்சியம், சோடியம் ஆகும். இதில் பொட்டாசியத்தையோ, மக்னீசியத்தையோ, கல்சியத்தையோ உப்பு வடிவில் பிரித்தெடுத்து உணவில் சேர்த்துக் கொள்ளாத நாம், சோடியம் உப்பை மட்டும் கடல் நீரிலிருந்து பிரித்துப் பயன்படுத்துகிறோம். சுவைக்காகவும், உணவுப் பொருட்களைப் பதப்படுத்துவதற்காகவும் அன்றாடச் சாப்பாட்டில் அதிகமாக சேர்க்கப் பழகினோம்.

விஞ்ஞான வளர்ச்சியால் நாளுக்கு நாள் மனித வாழ்க்கையில் உடல் உழைப்பு வெகுவாகக் குறைந்து வருகிறது. எப்போதும் உட்கார்ந்த நிலையிலும், ஏ.சி. அறையிலும் வேலை என்பது ஒரு பிரிவினரின் வாழ்க்கையாக மாறியுள்ளது. ஒரு மனிதனின் இரத்தத்தில் மொத்தம் இருநூறு கிராம்தான் சோடியம் உப்பு இருக்க வேண்டும். அதற்கு மேல் இரத்தத்தில் சேரும் உப்பு..வியர்வை, சிறுநீர் மற்றும் மலம் கழிப்பதன் மூலம் உடலில் இருந்து வெளியேறுகிறது. ஒரு லீற்றர் சிறுநீரில் இரண்டு கிராம் உப்பை வெளியேற்றுகிறது சிறுநீரகம்.

உதாரணமாக, பத்துகிராம் உப்பை வெளியேற்ற ஐந்து லீற்றர் சிறுநீர் கழிக்க வேண்டும். (இது தான் 'உப்பைத்தின்றவன் தண்ணீர் குடிப்பான்' என்ற பழிமொழியின் அர்த்தம்) உடலில் குறைபாடு இருக்கும் பட்சத்தில் சிறுநீரகம், சோடியம் உப்பை வெளியேற்றுவதற்குப் பதிலாக, உடல் பலத்தைத் தரும் மக்னீசியத்தையும், எலும்பு உறுதியைத் தரும் கல்சியத்தையும் வெளியேற்றப்பழகி விடும். உடலில் தேவைக்கு அதிகமாக சோடியம் உப்புத் தங்க ஆரம்பித்தால்...உடல் பருமனாகும். கல்சியம் வெளியேறுவதால் மூட்டு வலி, முதுகுவலி வரும். மக்னீசியம் வெளியேறுவதால் அசதி வரும். முக்கியமாக சிலருக்கு உயர் இரத்த அழுத்தம் ஏற்படும். இதனால் முக்கிய நரம்புகளில் வெடிப்பு ஏற்படும். இரத்தக் கசிவும் உருவாகலாம். மாரடைப்பு, சிறுநீரகப் பழுது போன்ற உயிர் ஆபத்துகளையும் சந்திக் நேரிடும். அதே போல நீரிழிவு நோய்கள் பெண்களுக்கான மாதவிடாய் பிரச்சினைகளுக்கும் அதிக உப்புதான் காரணமாக இருக்கிறது!'

கடல் உப்புக்கு மாறாக இந்திய ஆயுர்வேத மருத்துவத்தில் மலை உப்பைப் பயன்படுத்துகிறார்கள். இது மலைப்பிரதேசங்களில் பாறைவடிவில் கிடைக்கக் கூடியது. இதில் சோடியம் மிகமிகக் குறைவாகவும், சர்பேர், மக்னீசியம், கல்சியம் தாதுக்கள் அதிகமாகவும் இருக்கும். இந்த உப்பை வட இந்தியாவில் பணக்காரர்கள்தான் பயன்படுத்துகிறார்கள். காரணம், அத்தனை விலை.

அமெரிக்காவில் தயாரிக்கப்படும் அனைத்து உணவுப் பொருட்கள் மற்றும் பால் இவற்றில் சேர்க்கப்படும் சோடியத்தின் அளவை, அதன் அட்டையில் அச்சிட வேண்டும் என்ற சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படுகிறது. சோடியம் இல்லாத பொட்டாசியம் உப்புத்தூவிய உருளைக் கிழங்கு Chips, அங்கே விற்பனையில் இருக்கிறது. அதே போல் கடலுக்குள் இருக்கும் பவளப்பாறைகளில் இருந்து கிடைக்கும் மக்னீசியம், புரதம் அடங்கிய கோரல் உப்பு (coralsalt) ஜப்பான், அமெரிக்காவில் பிரபலம்.

ஆனால் சில பாக்கெட் பால் பொதிகளில் கூட 0.3 கிராம் வரை சோடியம் உப்புச் சேர்க்கப்படுகிறது. பல வீடுகளில் கடைகளில் விற்பனை செய்யப்படும் இனிப்பு வகையில், சோடியம் சேர்க்கப்படுகிறது. ஆனால் அதன் அளவை வெளிநாடுகளில் உள்ளதுபோல இங்கே நுகர்வோருக்குத் தெரிவிப்பதில்லை.

பிரபலமான குளிர்பானங்கள் அனைத்திலும் சோடியம் சல்பேட் சேருகிறது. கருவாடு, ஊறுகாய், அப்பளம், மற்றும் வகைகளில் கொஞ்சம் அதிகமாக சோடியம் இருக்கிறது. இவற்றைப் பயன்படுத்தும் மனிதனின் உடலுக்குள் ஒவ்வொரு நாளும் பத்திலிருந்து முப்பது கிராம் வரை சோடியம் உப்பு தானாகவே நுழைந்து விடுகிறது என்பது தான் அதிர்ச்சிக்குரிய விஷயம்.

ஆனால், பெரும் உடல் உழைப்பு இல்லாத இன்றைய மனிதனுக்கு அன்றாடத் தேவைக்காக வெறும் இரண்டு கிராம் உப்பே போதும் என்கிறார்கள் மருத்துவர்கள். ஆனால், அவன் சுவையாகச் சாப்பிடும் பொருள்களின் மூலம் இரண்டு கிராமைவிட அதிகமாகச் சேருகிறது. இப்படி உப்பின் அளவு கூடுவதனால், ஆண் மைப் பலம் மற்றும் கருத் தரிக்கும் வாய்ப்புகள் கூட குறைந்துவிடுகின்றனவாம்.

'சோடியம் உயிர்த்தன்மையை அழிக்கக்கூடியது. மனித விந்தில் மக்னீசியம், கல்சியம்தான் மிகுதியாக இருக்கிறது. உடலில் சோடியம் கூடும்போது....உயிர் அணுக்களை அது பாதிக்கும் என்பது உண்மையே. அனைத்துத் தாவர விதைகளிலும் மக்னீசியம் அதிகமாக இருக்கிறது.

'அதிக உப்பு சேர்த்துக் கொண்டால், அதிக அயோடின் சத்துக் கிடைக்கும் என சிலர் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். அயோடின் என்பது இரண்டு பக்கக் கத்தி போன்றது. அது குறைந்தாலும் பிரச்சினை. கூடினாலும் பிரச்சினை. சில விதமான புற்று நோய், தைரொய்ட் பிரச்சினைகளுக்குக் கூடுதல் அயோடினே காரணமாக உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அத்துடன், நமது உடலுக்குள் நுழையும் சோடியத்தின் அளவைக் கண்காணிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு நாக்கில் சுவை மொட்டுக்கள் நன்கு செயற்படும் என்பதால்..... சிறுவயது முதலேயே குறைந்த உப்புச்சுவையை அவர்களுக்குப் பழக்க வேண்டும். கூடியவரை பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்க்க வேண்டும். அல்லது அதன் சோடியத்தின் அளவைக் கவனித்து சேர்த்துக் கொள்ள வேண்டும். கசப்புச் சுவை உள்ள காய்கறிகளான பாகற்காய், வாழைத்தண்டு, பச்சை நிறக் கீரைகள் மற்றும் மோர், இளநீர் போன்றவற்றைத் தொடர்ந்து உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலம் மக்னீசியம், பொட்டாசியம், கல்சியம் போன்ற உப்புகள் நம் உடலில் இயற்கையாகவே சேர்ந்துவிடும்.

அதோடு, அன்றாடம் சில உடற்பயிற்சிகளைச் செய்வதன் மூலம் நமது வியர்வைச் சுரப்பிகளுக்கும் கொஞ்சம் வேலை கொடுக்கவும் வேண்டும்!

இது மட்டுமல்ல, பெரிய பெரிய நிறுவனங்களின் விளம்பரங்களைப் பார்த்து, அந்த உப்புகளை வாங்கிப் பயன்படுத்துவதை விட, கடைகளில் கிடைக்கும் சாதாரண கல் உப்பை வாங்கிப் பயன்படுத்துவதும் நல்லது. ●

கடத்தப்பட்ட தொண்டர்களை விடுவிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்

பொதுஅமைப்புகளின் ஒன்றியம் கண்காணிப்புக்குழுவுக்கு மகஜர்

கிளிநொச்சி—

வெலிக்கந்தையில் கடந்த 29, 30 ஆம் திகதிகளில் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக தொண்டர்களை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்கக்வேண்டுமென- கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர் ஒன்றை கையளித்துள்ளது.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொலநறுவை மாவட்டத்தின் வெலிக்கந்த பகுதியில் வைத்து கடந்த 29, 30 ஆம் திகதிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனித நேயப் பணியாளர்கள் அரச படைகளோடு சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுக்களால் கடத்தப்பட்ட செய்தி எம்மைப் பேரதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.

இந்தச் செயல் மனித நேயத்தையும், அமைதி, சமாதான வழிமுறை குறித்து சிந்தித்துச் செயலாற்றும் எம்மைக் கவலையடையச் செய்கின்றது. இந்தச் சம்பவத்தை எமது மக்களோடு இணைந்து எங்கள் அமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது. கடத்தப்பட்ட மனிதநேய அப்பாவிப் பணியாளர்களை உடன் விடுவிப்பதற்கான சகல பிரயத்தனங்களையும் தாங்களும், சர்வதேச சமூகமும் விரைந்து மேற்கொள்ளவேண்டுமென வினயமாக வேண்டுகின்றோம்.

யுத்தத்தின் கொடூரத்தாக்கங்களுக்கும், சுனாமி அனர்த்தத்தின் பின்விளைவுகளுக்கும் உட்பட்டு எமது சமூகம் பேரவலத்தைச் சந்தித்து நிற்கின்றது. சகல அடிப்படை வாழ்வியல் தேவைகளையும் இழந்து வாழ்கின்ற எமது மக்களின் எதிர்காலம் என்ன? இடைக்கால நிரந்தர அரசியல் தீர்வுகள் எதுவுமின்றி யுத்த நிறுத்த உடன்பாட்டின் நிலைபேறு பற்றி பேசித் தீர்க்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தமிழ் பேசும் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இத்தருணத்தில் மனிதநேய அமைப்புகள் மீதான அச்சுறுத்தல்களும், ஆட்கடத்தல்களும் ஏற்படுத்தக்கூடிய எதிர்விளைவுகள் பாரதூரமானவை. ஏனைய மனிதநேய அமைப்புக்களையும், பொதுப்பணியாளர்களையும் இந்தச் சம்பவம் அச்சுறுத்தி சோர்வடையச் செய்யும் என அஞ்சுகின்றோம். தமிழ் பேசும் மக்களின் அவசிய தேவைகளான நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்திப்பணிகளைப்பலப்படுத்திப் பயமற்ற பணிகளை மனித நேய அமைப்புக்கள் மேற்கொள்ள வேண்டுமானால் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 10 பணியாளர்களும் உடன் விடுவிக்கப்பட வேண்டும்.

தமிழ் பேசும் சமுதாயம் மீது உலக அடிப்படை நியதிகளுக்கு முரணான வகையில் கடும் ஒடுக்கு முறை ஏற்பாடுகளை அரசாங்கம் பிரயோகித்து வருகின்றது என்பதை தாங்கள் நன்கு புரிந்து கொண்டிருப்பீர்கள் என நம்புகின்றோம். இத்தகைய ஒடுக்குமுறைகள் புரிந்துணர்வு உடன்பாட்டின் முன்பும், பின்புமாக பரிணாமம் பெற்றே வந்திருக்கின்றது. இத்தகைய செயல்களை இலங்கை அரசு சர்வதேச சமாதான பார்வையாளர்கள் முன்பாகவே நேரடியாகவும், மறைமுகமாகவும் நிகழ்த்தி வருகின்றது. இறுதியாக ஜெனீவாவில் உயர் மட்ட பேச்சுக்களை நடத்தவும் அதற்கான புறச்சூழலை ஏற்படுத்தவும் இணங்கியிருந்த இந்த அரிய சந்தர்ப்பத்தில் இத்தகைய சம்பவங்கள் தொடர்வது அளவற்ற வேதனைகளையும், விரக்தியையும் ஏற்படுத்தி யிருக்கின்றது.

சமாதானத்தின் அடித்தளத்தை ஆட்டம் காணச்செய்யும் இத்தகைய கூர்மையான செயல்களைத் தடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

சர்வதேச சமூகமும் தாங்களும் எமது மக்களின் சமாதான சக வாழ்வு தொடர்பாக காட்டுகின்ற அக்கறை, விருப்பார்வம் என்பவற்றை நாம் நன்கறிவோம். தங்களது எதிர்பார்ப்புக்கு எத்தகைய குறைவும் இல்லாத வகையில் நாங்கள் சமாதானத்தை நேசிக்கின்றோம். இருப்பினும் இலங்கை யரசினுடைய இத்தகைய கட்டற்ற வன்முறைப் போக்குகள் சமாதானம் மீதான பொறுப்பற்ற தன்மையும், எங்களை ஆசுவாசப்படுத்திக் கொள்ள இயலாத நிலைக்கு இட்டுச்செல்கின்றது என்பதை தாங்கள் புரிந்துகொள்வீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

நிகழ்ந்தவை எவ்வாறு இருப்பினும் ஜனவரி 25 ஆம் திகதிக்கு பிற்பாடு உருவாக்கப்பட்டுள்ள நல்லெண்ணச் சூழ்நிலையையும், புதிய பேச்சுக்கான வாய்ப்புக்களையும் கைநழுவிப் போகாத வகையில் பாதுகாக்க வேண்டிய காத்திரமான பொறுப்பு அனைவருக்கும் உரியதாகும். எனவே, கடத்தப் பட்ட மனிதநேயப் பணியாளர்கள் உயிர் பாதிப்பற்ற வகையில் விடுதலை செய்யப்படுவதை உறுதி செய்ய தாங்களும், சர்வதேச சமூகமும் கடமைப்பாட்டிற்கு உரியவர்கள் என்பதை தங்களின் மேலான கவனத்திற்குத் தருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச பயங்கரவாதத்துக்கு எதிராக முழங்காவிலில் தீப்பந்த ஊர்வலம்

கிளிநொச்சி—

வடக்கு - கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கையை முன்வைத்தும், அரச படைகளாலும், ஒட்டுக்குழுக்களாலும் மேற்கொள்ளப்படும் படுகொலைகள், பாலியல் வல்லுறவுகளை நிறுத்துமாறும், சமாதானப் பேச்சுகளை விரைவில் ஆரம்பிக்குமாறும் வேண்டி கடந்த திங்கட்கிழமை முழங்காவிலில் தீப்பந்த ஊர்வலம் இடம்பெற்றது.

முழங்காவில் துயிலுமில்லத்திலிருந்து தீப்பந்த ஊர்வலம் ஆரம்பமாகி - மாவீரர் கலையரங்கைச் சென்றடைந்தது. அங்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பொதுச்சுடரை முழங்காவில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், மாதர்சங்கத் தலைவி, கரியாலை நாகபடுவான் கிராம அலுவலர், முழங்காவில் பிரதேச ஊரக வளர்ச்சித் தலைவர், அன்புபுரம் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து சிறப்புரைகளை ஆசிரியர் சசிகரன், நாச்சிக்குடா கிராம அலுவலர் ஆகியோர் ஆற்றினர்.

இந்தத் தீப்பந்த ஊர்வலத்தில் முழங்காவில், நாச்சிக்குடா வர்த்தகர்கள், பணியாளர்கள், கமக்கார அமைப்பு, மாதர் சங்கம், ஊரக வளர்ச்சிப் பேரவை, கிராம அபிவிருத்திச் சங்கம், சமூக பொருளாதார அபிவிருத்திக் குழு பிரதிநிதிகள், பூ.மு.அ நிறுவனப் பணியாளர்கள், கரியாலை நாகபடுவான் மக்கள், அபிவிருத்தித் திட்ட செயலகப் பணியாளர்கள் என ஆயிரத்துக்கும் அதிகமானோர் அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு உணர்வெழுச்சியுடன் கலந்து கொண்டனர்.

இறுதியில் கண்டன அறிக்கை வாசிக்கப்பட்டு உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டன.

கல்விக்கழகம் நடத்திய நேர்முகத் தேர்வில் கணித, விஞ்ஞான ஆசிரியராக தெரிவானோர்

கிளிநொச்சி—

கணித, விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பின்தங்கிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் இந்தப் பாடங்களை கற்பிப்பதற்கென ஆசிரியர்களை தேர்ந்தெடுக்கும் வகையில் தமிழீழ கல்விக் கழகத்தால் கடந்த டிசெம்பர் 20,21ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட 1 ஆம் கட்ட நேர்முகத் தேர்வில் 36பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை உடனடியாகத் தமிழீழ கல்விக்கழக நடுவப் பணியகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். தேர்ந் தெடுக்கப்பட்டவர்களின் விபரம் வருமாறு-

கணிதம்

வேதமணி நித்தியகீர்த்தி(மாவடித்தெரு, புலோலி தெற்கு), நமசிவாயம் கிருஸ்ணபவானந்தன்(கறுக்காய்த்தீவு, பூநகரி), சந்திரரவி செந்தாமரைச்செல்வன் (தம்பிராசாபுரம் உழவனூர், தருமபுரம்), கிருஸ்ணபிள்ளை முகுந்தன் (கிளிவெட்டி, அல்வாய் மேற்கு), கணேசு உமாப்பிரியா, (இல 77 ஜின்னா வீதி, யாழ்ப்பாணம்), ஜயப்பா அனபாயசீலன் (புத்தூர் கிழக்கு, புத்தூர்), கந்தசாமி அமிர்தாஸ் (இல 130 உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி), சின்னத்தம்பி சிவகுகன் (7ஆம் வட்டாரம், சிவநகர், புதுக்குடி யிருப்பு), விசயரத்தினம் பகீரதன் (இல 11 ஏ, குஞ்சுக்குளம், வன்னேரிக் குளம்), அருணாசலம் கோணேஸ்வரன் (சோலை, பல்லவராயன்கட்டு, பூநகரி), சண்முகம் தவராசா(இல 142, பெரிய பண்டிவிரிச்சான், மடு), குணபாலசிங்கம் மதிவதனன் (உசன், மிருசுவில்), வரதராஜா மதிமாறன் (பொன்னாலை தெற்கு சுழிபுரம்), முத்தையா ஜெயக்குமார் (இரணைப் பாலை, ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு), சூ.ஜேம்ஸ் ஜெயச்சந்திரன் (இந்திரன் கடையடி, புதுமுறிப்பு), செல்வக்குமார் சுதர்சன் (இல 286, புன்னைநீராவி, விசுவமடு), நலந்தினி குபேந்திரன் (சுகாதாரசேவை நடுவப்பணியகம், கிளிநொச்சி), செல்வராசா முகுந்தன் (இல 661 கொத்தம்பியகுளம், துணுக்காய்), சாரதகலா ஜெயதீசன் (செல்வாரிப்பிட்டி, கண்டாவளை).

விஞ்ஞானம்

அகிலயா சண்முகலிங்கம் (மாந்தைகிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்), ராதிகா சிவசுப்பிரமணியம் (இல 188/1 விசுவமடுமேற்கு), அந்தோனிப்பிள்ளை அமலதாஸ் (இல 45 ஏ.வி வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்), சிறிதுர்க்கா ரவிச்சந்திரன் (இல 422, 6ஆம் யுனிற், இராமநாதபுரம்), சியாமினி சிவலிங்கம் (இல 163, விசுவமடு), சுடர்விழி சிவராசா (இல74/1, விசுவமடு), செபமாலை விமலகாந்தன் (இல 262, புன்னை நீராவி, விசுவமடு), சாய்மீரா சச்சிதானந்தசிவம் (இல 319, புன்னை நீராவி, விசுவமடு), சிவஞானம் பிரசாந் (இல 415, யோகபுரம், மல்லாவி), சிறிஸ்கந்தராசா சிறிகாந் (இடைக்கால குடியிருப்பு, மருதங்கேணி வடக்கு, தாளையடி), தமிழழகி நகுலேஸ்வரன் (இல 81, கட்சன் வீதி, வட்டக்கச்சி), உமா சேகர் (4ஆம் பண்ணை, முழங்காவில்), நயனி சிவலிங்கம் (நீலாவில், அல்வாய் வடமேற்கு), சியாமளா பாலகிருஸ்ணன் (ஏ.கே.ஆர்பாம், உருத்திரபுரம் வீதி, கரடிபோக்கு), கணபதிப்பிள்ளை குலமணிதேவி (பன்றிசுட்டான், கண்டாவளை), சிவபாலன் சுதாகர் (இல 154, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி), ஞானகணேசன் ஜெயகௌரி (புன்னை நீராவி, நலன்புரி நிலையம், தருமபுரம்) ஆகியோரே தெரிவுசெய்யப்பட்டவர்களாவார்.

வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர் புகுமுக விழா

கிளிநொச்சி—

கிளிநொச்சி -வன்னேரிகுளம்- மகாவித்தியாலயத்தில் தரம்1 மாணவர்களின் புகுமுக விழா கடந்த 19 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு மேற்படி பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.

தரம் 1 வகுப்பாசிரியர் திருமதி பொலீன் ஜசலியற் எட்மறின் தலைமையில் இடம்பெற்ற இந்தநிகழ்வில்- முன்னதாக தரம்1 மாணவர்கள் வன்னேரிக்குளம் வைரவர் ஆலயத்திலிருந்து பூஜை, ஆராதனையின் பின் பெற்றோர், ஆசிரியர் சகிதம் பாடசாலைக்கு அழைத்துவரப்பட்டனர்.

பாடசாலை முன்றலில் தரம் 2 மாணவர்கள் அவர்களை மலர் மாலைகள் அணிவித்து வரவேற்பு நடனத்துடன் மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கு இடம்பெற்ற நிகழ்வில் மங்கள விளக்கை பாடசாலை பொறுப்பாசிரியர் க.சகாயமலர், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திருமதி.ப.வரதராஜன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து தரம் 1 வகுப் பாசிரியர் திருமதி பொலீன் ஜசலியன் எட்மறின் தலைமை உரையை தொடர்ந்து, வரவேற்புரையை தரம் 2 மாணவன் சோ.திசோபன் வழங்கினார். ஆசியுரைகளை ஆசிரியர்களான க.சகாயமலர், ப.நடேசலிங்கம், கு.தயாபரன் ஆகியோரும், வாழ்த்துரைகளை ஆசிரியர் சொ.தங்கேஸ்வரி தரம்2 மாணவி சு.கஸ்தூரி, பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் திருமதி ப.வரதராஜன் ஆகியோரும் வழங்கினர்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், தரம்1 மாணவர்களுக்கு பரிசில் வழங்கலும் இடம் பெற்றது. நன்றியுரையை சகுந்தலா தேவி பாலச்சந்திரன், தரம் 2 மாணவி உ.சாணுசா ஆகியோர் வழங்கியதுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

பற்சுகாதார மாதமாக சுகாதார சேவை பிரகடனம்

கிளிநொச்சி—

தமிழீழ சுகாதார சேவைகளின் பற்சுகாதார சேவை பிரிவினரால் பெப்ரவரி மாதத்தை பற்சுகாதார விழிப்புணர்வு செயற்பாட்டு மாதமாக பிரகடனப்படுத்தியுள்ளனர்.

இந்த பற்சுகாதார விழிப்புணர்வு செயற்பாட்டு மாதத்தில் சுகாதார சேவையினரால் பல்வேறு மாவட்டங்களிலும் பற்சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளை மெற்கொண்டு வருகின்றனர். அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், முன்பள்ளி மாணவர்கள், சிறுவர்கள், முதியோர் இல்லங்கள் என கிராம, பிரதேச மட்டங்களில் பற்சுகாதார விழிப்புணர்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனையொட்டி தமிழீழ சுகாதார சேவையினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பற்சுகாதார பாதிப்புக்கள் ஏற்படும் காரணிகளில் முக்கியமானதாகக் காணப்படும் பற்பொடி, உமிக்கரி, விறகுக்கரி என்பவற்றைப் பாவித்து கைகளால் பற்சுத்தம் மேற்கொள்வதால் பல்மினாரி, பல்முரசு தாக்கமும், பற்சூத்தை, முரசு அழற்சி ஆகியனவும் ஏற்படுகின்றது.

எனவே, என்றும் பல் ஆரோக்கியத்தை பேண பற்தூரிகையையும், பற்பசையையும் பாவித்து காலை, இரவு, உணவு உண்டபின்னர் இருவேளையும் பற்களை சுத்தமாக்குவதனூடாக பற்சுகாதார மேம்பாட்டை பெற்று என்றும் பல் உறுதியுடனும், முக அழ குடனும் வாழ்ந்து ஆரோக்கியம் பெறுவோம். இவ்வாறு சுகாதார சேவையினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்காப்புப் பயிற்சி ஆரம்பம்

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - வாகரை, ஆலங்குளம் கோட்டத்தில் புதிதாக இணைந்து கொண்ட 400 துணைப்படையினருக்கான தற்காப்பு பயிற்சிகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

தமிழீழ விடுதலைப் புலிகளின் துணைப்படையில் வாகரை, ஆலங்குளம் கோட்டத்தில் அண்மையில் இணைந்து கொண்ட 400 பேருக்கான தற்காப்பு பயிற்சியே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக ஆலங்குளம் கோட்ட துணை அரசியல் பொறுப்பாளர் உதயராஜ் தெரிவித்தார்.

இதேவேளை போரதீவு கிராம மக்களுக்கான தற்காப்பு பயிற்சியும் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பேரதீவு பிரதேச பொறுப்பாளர் மாமாவின் ஒழுங்குபடுத்தலில் போரதீவு பத்திரகாளி அம்மன் ஆலய முன்றலில் பயிற்சி ஆரம்பமானது. இதில் பிரதேச பொறுப்பாளர் மாமாவின் பயிற்சியின் முக்கியத்துவம் தொடர்பாக கருத்துரை வழங்கினார். தொடர்ந்து நிலவன் மாஸ்ரர் பயிற்சியை ஆரம்பித்து வைத்தார். இதில் 250 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கடந்த 30 ஆம் திகதி வெலிகந்தையில் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக தொண்டர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தால் கிளிநொச்சியிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

இதன்போது பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் மகஜருடன் காணப்படுவதை முதலாவது படத்திலும், கிளிநொச்சி கண்காணிப்புக் குழு பிரதிநிதி ஜெமிசனி டம் இணையத் தலைவர் சி.கணேசலிங்கம் மகஜர் கையளிப்பதை இரண்டாவது படத்திலுல் காணலாம்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்அரணும் நாட்டுக்கு உறுப்பு.
- திருக்குறள்

நமது நோக்கு

பொறுப்பற்ற கேள்வி!

வெலிக்கந்தவில் வைத்து தமிழர் புனர்வாழ்வுக் கழக தொண்டர்கள் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப் படுவது திரிபுபடுத்தப்பட்ட பொய்யான செய்தி என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

காணாமற்போன பத்துத் தொண்டர்களில் இரு பெண்கள் மட்டும் விடுவிக்கப்பட்டு-எஞ்சியோர் ஆயுதக்குழுவினரால் கடத்தப்பட்டது உறுதி செய்யப்பட்ட நிலையில் கூட, அவர் இப்படிக் கூறியிருப்பது - அரசாங்கம் இந்த விடயத்தில் அசமந் தப்போக்கில் இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது.

கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றது - கருணா குழுவின் நடமாட்டம் அதிகம் உள்ள வெலிக்கந்தப் பிரதேசத்தில்தான் என்பதும், இது இராணுவக் கட்டுப் பாட்டுப் பிரதேசம் என்பதையும் ஒருமுறை பாதுகாப்பு செயலர் நினைவில் கொள்ள வேண்டும்.

இராணுவ சோதனைச் சாவடியில் இருந்து 100 மீற்றர் தொலைவில் இடம்பெற்ற இந்தக் கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக-உடனடியாக ஏன் பொலிஸாரிடம் முறையிடவில்லை என்றும், அடுத்த நாள் வரை ஏன் காத்திருந்தார்கள் என்றும் கோத்தபாய ராஜபக்ஷ கேள்விகளை எழுப்பியிருக்கிறார்.

ஆனால், வாழைச்சேனைக்கும், பொலநறுவவுக்கும் இடையில் கருணாகுழுவை படையினர்தான் பாதுகாப்புக் கொடுத்து வைத்திருக் கின்றனர் என்பதை அனைவரும் அறிந்திருக்கின்ற போது, எவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் பொலிஸா ரிடம் முறையிடச் செல்வார்கள்?

கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக செய்தியாளர்களுக்கோ, அல்லது வேறெவருக்கோ புகார் செய்யக் கூடாது என்று கடத்தல்காரர்கள் அச்சுறுத்திவிட்டே விடுவித்திருக்கும் போது இவர்கள் எவ்வாறு துணிந்து பொலிஸாரிடம் முறையிடச் செல்வர்.

அப்படிப் புகார் செய்திருந்தாலும் கூட, ஆயுதக் குழுவினரிடமிருந்து தப்பிவந்தவர்களுக்கு அரச படையினராலோ, பொலிஸாராலோ பாதுகாப்புக் கொடுக்க முடியுமா? இதைத் தெரிந்து கொண்ட எவராவது தாம் பாதுகாப்பான இடத்துக்கு வந்து சேர்ந்த பின்னர் தான் விடயத்தை வெளியிடுவரேதவிர, அச்சுறுத்தல் மிகுந்த சூழலில் மீண்டும் பொறிக்குள் சிக்கிக்கொள்ள விரும்பமாட்டார்கள்.

ஒரு முன்னாள் இராணுவ அதிகாரியான கோத்தபாய ராஜபக்ஷவுக்கு இப்படிப்பட்ட அடிப்படைப் பாதுகாப்பு விடயங்கள்கூடத் தெரியாமல் போய்விட்டதா?

தமது தரப்பை நியாயப்படுத்துவதற்காக இப்படி ஒன்றுக்கு இரண்டு கடத்தல் சம்பவங்கள் நடந்திருக்கும் போது அவற்றை மூடிமறைக்கப் பார்ப்பது பொருத்தமானதல்ல.

இந்த விடயத்தில் அமெரிக்கா போன்ற நாடுகளும், ஐ.நாவும் கொண்ட கரிசனையை இலங்கை அரசு கொள்ளவோ, காணாமல் போனோரை மீட்க நடவடிக்கை எடுக்கவோ இல்லை.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்களைக் கடத்திச் சென்ற ஆயுதக்குழுவினர் அடைய நினைக்கும் இலக்கு நிச்சயமாக பணமோ அல்லது சாதாரண கடத்தல்களின் போது கோரப்படும் விடயங்களாகவோ இருக்காது.

இதையே ஒரு சாட்டாக வைத்து ஜெனிவா பேச்சு வார்த்தைகளைக் குழப்புவதுதான் இவர்களின் இலக் காக இருக்கும். இந்தநிலையில் பாதுகாப்புச் செயலரின் கருத்து நிச்சயமாக கடத்தல்காரர்களுக்குத் துணை போவதாகவே இருக்கும்.

இப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லையென அவர் கைவிரிக்க, புலிகளோ இந்தக் கடத்தல் தொடர்பான தீவிர நடவடிக்கையில் இறங்கவில்லையெனில் - நிச்சயம் ஜெனிவா பேச்சுக்களுக்குக் குந்தகம்தான் ஏற்படும்.

ஆயுதக் குழுவினருக்கு மேலும் உற்சாகம் அளிக்கும் வகையில் பாதுகாப்புச் செயலர் கருத்து வெளியிட்டதோடு மட்டுமன்றி, இனிமேலும் இத்தகைய சம்பவங்கள் தொடர்வதற்கு அவர் உந்து சக்தியாக இருந்துள்ளார்.

தாம் எதைச்செய்தாலும் அப்படி ஏதும் நடக்கவில்லை என்றுகூற பாதுகாப்புச் செயலர் இருக்கிறார் என்ற தைரியத்தில் ஆயுதக்குழுவினரின் அட்டகாசம் அதிகரிக்குமே தவிர குறையப் போவதில்லை.

பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இந்த நெருக்கடியான தருணத்தில் பொறுப்பை மறந்து செயற்படுவது ஆபத்தான விளைவுகளுக்கே வழிகோலும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

நாடும் நடப்பும்



பெப்ரவரி மாதத்தை அமைதி மாதமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் அறிவிப்பு

கொழும்பு

இலங்கையில் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு 4 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி பெப்ரவரி மாதத்தை அமைதி மாதமாக அரசசார்பற்ற நிறுவனங்கள் அறிவித்துள்ளன. அமைதிக்கான அமைப்பு ஒன்று இந்த அறிவிப்பை கொழும்பு ஊடக வியலாளர் மாநாட்டில் அறிவித்தது.

இதுதொடர்பாக கொழும்பு ஊடக வியலாளர் மாநாட்டில் சமாதான செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில்-

போர்நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருந்த போதும் - கடந்த இருமாத வன்முறைகள் எம்மை அதிர்ச்சியடைய வைத்தன. போர்நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும்போதும் படுகொலைகள் நடப்பதானால் என்ன அர்த்தம்? என்று பலரும் கேள்வி எழுப்பினர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாத்து யுத்தத்தைத் தவிர்க்க ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமெனத் தெரிவித்தார்.

கொழும்பைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று,போர் நிறுத்தத்தை ஆய்வுசெய்து அதனடிப்படையிலான பரிந்துரைகளை ஜெனிவா பேச்சுக்களின் போது சமர்ப்பிக்க முடிவு செய்துள்ளது.

மனிதாபிமானப் பணிகளுக்கான அரச சார்பற்ற நிறுவனமும், யுத்தத்துக்கு எதிரான தேசிய முன்னணியும் இணைந்து பெப்ரவரி 25ஆம் திகதி கொழும்பில் நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளதாக அந்த அமைப்புக்களின் நிர்வாகிகளில் ஒருவரான குமார் ரூபசிங்க தெரிவித்தார்.

இதேவேளை போர்நிறுத்த ஒப்பந்தத்தை விளக்கி ஒரு லட்சம் பிரதிகளை வெளியிட ராவய நாளிதழ் முடிவு செய்துள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகளை உறுதிசெய்ய மூன்று மாதகால நடமாடும் சேவை!

கொழும்பு

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பரீட்சைப் பெறுபேறுகளை துரிதமாகவும், வேகமாகவும் உறுதி செய்யும் நோக்கில் மூன்றுமாத நடமாடும் சேவை செயற்திட்டமொன்றை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.

உரிய மாகாணங்களில் அமைந்துள்ள அரச நிறுவனங்களும், ஏனைய நிறுவனங்களும் பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் விண்ணப்பங்களை நடமாடும் சேவை நடைபெறும் தினத்திலேயே சமர்ப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

31.05.2005 இற்கு முன் பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பித்து பெறுபேறுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு, அரச நிறுவனங்களின் தலைவர்களையும், ஏனைய நிறுவனங்களின் தலைவர்களையும் பரீட்சை ஆணையாளர் கேட்டுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை அதிபர்கள்- அழிவுற்ற தங்கள் பாடசாலைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் அதுதொடர்பான விபரங்களை ஒப்படைத்து விண்ணப்பிக்க முடியும் என்றும், இந்த விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிப்பாளரிடம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் பரீட்சை ஆணையாளர் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஏப்ரல் 27, 28 ஆம் திகதிகளிலும், மன்னாரில் மார்ச் 13 ஆம் திகதியும், வவுனியாவில் மார்ச் 16 ஆம் திகதியும், திருகோணமலையில் மார்ச் 9 ஆம் திகதியும், மூதூரில் மார்ச் 10 ஆம் திகதியும், மட்டக்களப்பில் பெப்ரவரி 22 ஆம் திகதியும், கல்முனையில் பெப்ரவரி 21 ஆம் திகதியும், அம்பாறையில் பெப்ரவரி 20 ஆம் திகதியும் இந்த நடமாடும் சேவை இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பண்ணையில் தொழிலாளி மிரட்டல்; கடற்படையினரால் வலை அபகரிப்பு!

மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்றொழிலாளர் ஒருவரின் வலையை அபகரித்த கடற்படையினர் அவரையும் சுட் டுக் கொல்வோம் என மிரட்டியுள்ளனர்.

இது தொடர்பாக கொட்டடியைச் சேர்ந்த பற்றிக் ரஞ்சன் (வயது26) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தைமனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இவர் கடந்த 28ம் திகதி பண்ணைக் கடற்பரப்பில் இறால் பிடிப்பதற்காக வலையைப் போட்டதைப் பார்த்துக் கொண்டு நின்ற கடற்படையினர் அந்த வலை மற்றும் கம்புகளையும் எடுத்துச் செல்ல முற்பட்டனர்.

இதனைக் கண்ட குறிப்பிட்ட தொழிலாளி இந்த வலையை கடன்பட்டு இன்றுதான் வாங்கியதாகவும், ஆகையால் தனது வலை மற்றும் கம்புகளையும் தன்னிடம் ஒப்படைக்கும்படி கேட்டுள்ளார்.

இதனை மறுத்த கடற்படையினர் அவரை கெட்ட வார்த்தைகள் மூலம் திட்டியதுடன், துப்பாக்கியைக் காட்டி ஓடு இல்லாவிட்டால் சுட்டுவிடுவோம் என சிங்களத்தில் பேசி கலைத்துள்ளார்கள்.

பயத்தின் காரணமாகத் தொழிலாளி தற்போது மனித உரிமைகள் ஆணைக் குழுவில் - தான் கடன்பட்டு வாங்கிய வலையை கடற்படையினரிடமிருந்து பெற்றுத் தருவதுடன், தொழில் செய்ய ஆவன செய்யவேண்டுமெனவும் முறையிட்டுள்ளார்.

கல்வியறிவு, சமூக நோக்குள்ளவர்களை வேட்பாளர்களாக நிறுத்த வேண்டும்!

மலையக மக்கள் கோரிக்கை

கொழும்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது மலையக தமிழ் கட்சிகள் தமது வேட்பாளர்களாக ஓரளவு கல்வியறிவு உள்ளவர்களையும், சமூக நோக்குகளில் ஆர்வமுள்ளவர்களையும் இடம்பெறச் செய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களாக - பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள் விளங்குகின்றன.

இந்தச் சபைகள், தத்தமது நிர்வாக பிரதேசங்களில் உள்ள குடியிருப்பாளர்களிடமிருந்து பல்வேறு கட்டணங்களை அறவிட்டு அவற்றின் மூலம் குடியிருப்பாளர்களுக்கு பொது வசதிகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்தச் செயன்முறையில் மலையக மக்கள் இதுவரை உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், தமிழ் மக்களின் அரசியல் பிரதி நிதித்துவத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக உள்ளூராட்சி சபைத் தேர்தல்களிலும் மலையக மக்கள் வாக்களித்து வருகின்றனர்.

இந்த நிலையில், எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் மலையக தமிழ்க் கட்சிகள் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.

கடந்த காலங்களில் தகுதியற்றவர்கள் பலர் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டனர். வாக்களித்தவர்களுக்கு, இவர்களால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை என பொது மக்கள் விசனம் தெரிவித்தனர். (01)

இந்த வாரம் உங்கள் பலன் எப்படி? 03.02.2006 - 09.02.2006

ராகு சந்	செவ்		
யுரே	03 இ. 9.01 மே - சந் 05 ப. 11.28 இட - செவ் 05 இ. 10.25 கும் - புத 05 இ. 2.23 இட - சந் 08 ப. 10.51 மிது - சந்		சனி
சுக்		குரு	கேது

மேடம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் கால்)

மேட ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சதா பிரச்சினைகளும், நிம்மதிக் குறைவும் இருந்து கொண்டிருக்கும். புத்திரர்களால் தொல்லைகள் அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். தொடங்குங் கருமங்கள் வெற்றியளிக்காது. தேகசுகம் பாதிப்படைவதால் வைத்தியச் செலவு அதிகமாகும். மங்கள கருமங்கள் காலவரையின்றித் தள்ளிப்போகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். சகஊழியரின் உதவிகள் கிடையாது. அதிகாரிகளும் கடுமையாக நடந்து கொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் குறையும். முதலீடுகள் தேங்கிக்கிடக்கும். கடன் தொல்லைகளும் தவிர்க்க முடியாமலிருக்கும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறையும். எடுத்த ஒப்பந்தங்களை நிறைவேற்ற முடியாமல் தவிப்பர். மாணவர்களுக்கு கல்வி ஊக்கம் குறையும்.

இடபம்

(கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2)

இடபராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப நிலை சிறப்பாக அமையும். இல்லறம் நல்லறமாக விளங்கும். பணவருவாய் சிறப்பாக இருக்கும். புத்திரர்களால் உதவியும், மதிப்பும் கிட்டும். எடுத்த கருமங்கள் தங்கு தடையின்றி நிறைவேறும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். மங்கள கருமங்களை எதிர்நோக்கியிருப்போர் மகிழ்ச்சியுடன் புதுவாழ்வைத் தொடங்குவர். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு பிரமாதமாக இருக்கும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மிகச் சிறப்பாக நடக்கும். அபரிமித லாபம் பெறலாம். புதிய முதலீடுகளுக்கும் நன்று. தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை வலுக்கும். புதிய தொழில்களால் வருவாய் சிறக்கும். மாணவர்களுக்கு ஆசிரியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பரீட்சைகளில் சித்தி உண்டு.

மிதுனம்

(மிருகசீரிடம் 3,4 திருவாதிரை,புனர்பூசம் 1,2,3)

மிதுன ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு நிலவினாலும், இடையிடையே சச்சரவுகளும் தோன்றும். பணவருவாய் தேவைக்கேற்ப கிடைக்கும். தொடங்குங் கருமங்கள் தாமதத்தின் மேல்கைகூடும். தேகசுகம் அதிகம் பிரச்சனை தராது. புத்திரர்களால் உதவியில்லாவிட்டாலும் தொல்லைகள் இல்லை. விவாகம் முதலிய மங்கள கருமங்கள் காலதாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோத்தர்களுக்கு வேலைப்பொறுப்புக்கள் கூடினாலும் சக ஊழியரின் உதவியுடன் சமாளிக்கலாம். மேலதிகாரிகளுக்கேற்ப நடந்துகொள்வது நன்று. வர்த்தகர்களுக்கு அன்றாட வியாபாரம் குறையும். நகை வியாபாரிகள் கூடிய பலன் காண்பர். தொழிலாளர்களுக்கு வேலைகளுக்கேற்ப வருவாய் கிடைக்கும். மாணவர்கள் அதிக ஊக்கமெடுத்தால் சித்தி உண்டு.

கடகம்

(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)

கடகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப உறவுகள் சுமுகமாக இருக்கும். பணவருவாய் திருப்திகரமாக இருக்கும். புத்திரர்களாலும், உறவினர்களாலும் உதவி உண்டு. பிரயாணங்கள் வசதியாக அமையும். தொடங்குங் கருமங்கள் வெற்றிதரும். பெரியோர்களால் உதவி உண்டு. மங்கள கருமங்கள் இழுபடாமல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். ஊதிய உயர்ச்சி கிட்டும். வேலைப்பொறுப்புக்கள் வசதியாக அமையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகமாகும். ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் அதிக நன்மை பெறுவர். தொழிலாளர்களுக்கு புதிய தொழில் ஒப்பந்தங்களால் வருவாய் சிறக்கும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமும், பரீட்சைகளில் சித்தியும் பெறுவர். உயர் கல்வி வாய்ப்புகள் உண்டு.

சிங்கம்

(மகம், பூரம், உத்தரம்1)

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கும். எதிர்பாராத செலவுகளும், வீண்விரயங்களும் ஏற்படலாகும். புத்திரர்களால் தொல்லை அதிகரிக்கும். தேகசுகம் பாதிக்கப்படுவதால் வைத்தியச் செலவுகள் அதிகமாகும். தொடங்குங் கருமங்கள் சித்திபெறாது. விவாகம் முதலிய மங்கள கருமங்கள் இழுபறி நிலைமையைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். வேலைப் பொறுப்புகளைச் சமாளிக்க முடியாமலிருக்கும். மனதில் அமைதியின்மை காட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையிலிருக்கும். எதிர் பார்த்த லாபம் கிடையாது. நிதி வசதிகள் தடைப்படும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. தொழிலாளர்களுக்கு உழைப்புக் கேற்ப ஊதியம் கிடையாது. அதனால் மனக்கவலை அதிகமாகும். மாணவர்களுக்கு கல்வி யில் நாட்டம் குறையும்.

கன்னி

(உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2)

கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்வில் சற்று நிம்மதி நிலவும். வருமானம் ஓரளவு திருப்தி தரும். தேகசுகம் சற்று குறைவாக இருந்தாலும் அதிக பாதிப்புகள் இல்லை. தொடங்குங் கருமங்கள் தாமதத்தின் மேல் சித்தியளிக்கும். பெரியோர் உதவிகள் உண்டு. விவாகம் முதலான மங்கள கருமங்கள் காலதாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாயினும் சகஊழியரின் உதவியுடன் சமாளிக்கலாம். ஊதிய உயர்ச்சி தாமதத்தின் மேல் கிட்டும். வர்த்தகர்களுக்கு முதலீடுகளுக்கு ஏற்ப லாபம் கொடுக்கும். வாடிக்கையாளர்களை அணைத்துக் கொண்டால் லாபமுண்டு. தொழிலாளர்களுக்கு பிரயாசை கூடுதலாக இருக்கும். கடின உழைப்பால் வருவாய் பெருகும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் அவசியம். தடைகள் ஏற்பட்டாலும் முன்னேற்றமுண்டு.

துலாம்

(சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3)

துலாராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் பல சிறப்பான பலன்கள் தென்படுகின்றன. குடும்பத்தில் நல்லுறவு வளரும். வருவாய் பெருகும். உறவினரின் கொண்டாட்டங்கள் மகிழ்ச்சி தரும். வீட்டில் சுப நிகழ்வு இடம் பெறும். வெளிநாட்டிலிருந்தும் வருவாய் கிடைக்கும். மங்கள கருமங்கள் மனம் போல் நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு அபிலாசைகள் நிறைவேறும். மேலதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மிகச் சிறப்பாக நடக்கும். முதலீடுகளால் அதிக லாபம் கிட்டும். புதிய முதலீடுகளுக்கு உகந்த காலம். தொழிலாளர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். ஒப்பந்தங்களால் கூடிய லாபம் உண்டு. மாணவர்கள் கல்வியில் ஊக்கமும், பரீட்சைகளில் சித்தியும் பெறுவர்.

விருச்சிகம்

(விசாகம் 4, அனுஷம், கேட்டை)

விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப உறவுகள் சீராக இருக்கும். பணவருவாய் திருப்தியாக இருக்கும். தொடங்கும் கருமங்கள் நற்பயனளிக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டு. தேகசுகம் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். மங்கள கருமங்கள் விரைவில் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும், ஒத்துழைப்பும் கிட்டும். சக ஊழியர்கள் ஒற்றுமை வலுக்கும். எண்ணிய கருமங்கள் பலிதமடையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். முதலீடுகளால் இலாபம் கிட்டும். வங்கி நிலை சீராக இருக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் நல்ல முறையில் நடக்கும். வருமானம் பெருகும். தொழிலாளர் மத்தியில் ஒத்துழைப்பு இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். சித்திகள் உண்டு.

தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம், 1)

தனுசு ராசியில் பிறந்தவர்களுக் குடும்பத்தில் அமைதி குன்றும். சச்சரவுகள் வாக்குவாதங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் துன்பத்தைத் தருவார்கள். தேகசுகம் பாதிக்கப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். கடன் தொல்லைகளும் தலைதூக்கும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண் டும். மங்கள கருமங்கள் இழுபறி நிலையைக் காட் டும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். பிர யாணங்களில் கஷ்டங்கள் தோன்றும். எண்ணிய கருமங்கள் தடைப்படும். வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் லாபம் குறையும். வியாபாரத்தில் போட்டிகள் தலை தூக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களுக்கு செய்தொழிலுக்கேற்ற லாபம் கிடையாது. இயந்திரங்களில் கோளாறுகள் ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் பின்தங்கியநிலை காட்டும்.

மகரம்

(உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2)

மகரராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறவாழ்வு சுமுகமாக நடந்தாலும் இடையிடையே சச்சரவுகளும் தோன்றும். பணவருவாய் சுமாராக இருக்கும். தொடங்குங் கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவு பெறும். தேகசுகம் அதிகம் பாதிக்காது. புத்திரர்களால் உதவி குறையும். மங்கள கருமங்கள் தாமதத்தின்மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாயினும் சக ஊழியரின் உதவியுடன் சமாளிப்பர். ஊதிய உயர்ச்சி தாமதத்தின்மேல் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். முதலீடுகளில் அதிக லாபம் எதிர்பார்க்க முடியாது. ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடுதல் லாபம் பெறுவர். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் இருந்தாலும் பிரயாசை கூடுதலாகவே இருக்கும். மாணவர்களுக்கு முயற்சிக்கு ஏற்ப சித்தி உண்டு.

கும்பம்

(அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3)

கும்ப ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்வில் அமைதி நிலவும். உறவினர்களுடன் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சி ஏற்படும். பணவருவாய் திருப்திகரமாக இருக்கும். முயற்சிகள் எண்ணங்கள் பலிதமடையும். தேகசுகம் நன்றாகவே இருக்கும். விவாகம் முதலிய மங்கள கருமங்கள் தங்கு தடையின்றி நிறைவேறும். உத்தியோ கத்தர்களுக்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். போக்குவரவு வசதிகளும், வசதியான இடமாற்றங்களும் அமையும். கௌரவம் மதிப்பு உயரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். முதலீடுகள் நன்கு விற்பனை யாகும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப் புக்கள் கூடும். தொழில் சிறப்பாக நடக்கும். நல்ல லாபமும் கிட்டும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் அதிகரிக்கும்.

மீனம்

(பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)

மீன ராசியில் பிறந்தவர்களுக்கு சிறப்பான பலன்கள் நடக்கும். இல்லறம் நல்லறமாக நடக்கும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்கும். நண்பர்கள், உறவினர்களின் வருகையால் வீடு கலகலப்பாக இருக்கும். பணவருவாய் பெருகும். வெளிநாட்டிலிருந்து வருவாய் வந்து சேரும். தேகசுகம் சிறப்பாக இருக்கும். மங்கள கருமங்கள் மனம்போல் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு மதிப்பு, மரியாதை உயரும். அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் விற்பனையாகி பணம் சேரும். ஆடை ஆபரணங்கள் விற்பனை செய்வோர் கூடுதல் லாபம் பெறுவர். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புக்கள் உண்டு. சிலருக்கு இயந்திர வசதிகள் கூடும். மாணவர்கள் கல்வியில் விசேட சித்திகள் பெறுவர்.

பேச்சுகளில் அவதானமாக இருக்க வற்புறுத்துகிறது திவயின நாளிதழ்!

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்துக்கும்-விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சுவிற்சர்லாந்தின் ஜெனீவாவில் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

இந்தப் பேச்சுக்களில் அரசாங்கத்தின் மிக முக்கிய பொறுப்பானது நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பான பூரண அறிவைக் கொண்ட பிரதிநிதிகளை அரசாங்கத்தின் சார்பில் சேர்த்துக்கொள்வதாகும்.

விடுதலைப் புலிகளின் குழுவில் அந்த அமைப்பின் இராணுவப் பிரிவைச் சேர்ந்த ஜெயம் என்பவர் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கைக்கு எதிராக புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பாதுகாக்க முன்வந்தவராவார்.

இப்படியான நிலையில் விடுதலைப் புலிகளின் உபாயங்கள் குறித்து அரச பிரதிநிதிகள் கவனமாக இருத்தல் வேண்டும்.

நோர்வே நிதியைப் பெற்றிருக்கும் எந்தவொரு உறுப்பினரையும் இந்தப் பேச்சுக் குழுவில் உட்சேர்க்காமல் பார்த்துக்கொள்வதே ஜனாதிபதியின் முக்கிய பொறுப்பாகும். ஏனெனில், அவர்கள் வெளிநாட்டு உரிமைகளுக்கு உட்படுவதால் இந்த நாட்டுப் பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட இடமுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும். அரசாங்கம் நல்ல எதிர்பார்ப்புக்களுடன் பேச்சுக்களில் ஈடுபட முன்வந்தாலும், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் லண்டனுக்குச் சென்று கூறியிருக்கும் கருத்துக்கள் சம்பந்தமாக மகிழ்ச்சியடையக் கூடிய நிலை இல்லை.

விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நிறுத்தத் தீர்மானித்த பின்னர் படையினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், அவ்வாறான நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் தேடுதல்களை மேற்கொள்வது பாதுகாப்புப் படையினரின் அடிப்படை உரிமையாகும். அவ்வாறான நிலையில் சோதனை நடவடிக்கைகளை கைவிடுமாறு கோரும் பாலசிங்கத்தின் கூற்றை ஏற்க முடியுமா?

இதேவேளை லண்டனிலிருந்து வந்த பி.பி.சி.நிருபர் - விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர் ஒருவரை இராணுவம் படுகொலை செய்துள்ளது என்று பிரச்சாரம் நடத்தினார்.

இப்படியான நிலையில் பேச்சுவார்த்தையை குழப்ப முயற்சிக்கப்படுவதாக அரசாங்கம் கூறுகிறது.

கடந்த வாரம் முழுவதும் வெளிநாட்டு ஊடகங்கள் நடந்துகொண்ட முறை குறித்து அவதானித்தால் அரசாங்கமும் - விடுதலைப் புலிகளும் யுத்தத்தை ஆரம்பிக்கத் தயாராக இருப்பதாக பிரச்சாரங்களை மேற்கொண்டன.

அப்படியான நிலையில் நாட்டின் உள்ளக விவகாரங்களில் வெளிநாட்டு ஊடகங்களுக்கு தலையீடுகளைச் செய்ய அனுமதியளிக்க முடியுமா?

அதேபோல் இந்திய ஊடகவியலாளர் ஒருவர் வடக்கு - கிழக்கு மக்களை இராணுவத்தினர் சித்திரவதை செய்வதாக பிரச்சாரங்களை மேற்கொண்டார்.

இப்படியான நிலையில் ஜெனீவா பேச்சுக்குத் தடங்கல்களை ஏற்படுத்துவது யார் என்பதை அரசாங்க அதிகாரிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

துரதிஷ்டவசமாக வெளிநாட்டு ஊடகங்கள் இந்த நாட்டில் செய்வது என்ன என்பதைப் பற்றி அரசாங்க செய்தித்துறை அதிகாரிகள் அறியாமல் உள்ளனர்.

ஜெனீவா பேச்சுக்களின் போது அரசாங்கப் பிரதிநிதிகளின் முக்கிய கடமையாக இருப்பது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு உரிய கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான இணக்கப்பாட்டை உருவாக்குவதாகும்.

தற்போதைய போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவானது பெயரளவில் மாத்திரம் இயங்கும் ஒன்றாகும். அதன் தலைவர் குறித்தும், பேச்சாளர் குறித்தும் திருப்தியடைய முடியாத நிலையேயுள்ளது. கடந்த காலங்களில் நாட்டின் உள்ளக விவகாரங்களிலும் இந்த குழு தலையீடுகளைச் செய்துவந்தது.

ஜெனீவா பேச்சுக்களுக்கு அடித்தளமாக இருக்க வேண்டியது விடுதலைப் புலிகளால் சில விடயங்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் நிபந்தனைகளற்ற விடயங்களாகுமே தவிர பாலசிங்கத்தின் நிபந்தனைகளல்ல.

பிரித்தானிய அரசாங்கத்துக்கும் -ஐ.ஆர்.ஏ. அமைப்புக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையையடுத்து ரியல் ஐ.ஆர்.ஏ.என்றொரு பிரிவு தோன்றியது.

அந்த குழுவின் ஆயுதங்களைக் களையுமாறு ஐ.ஆர்.ஏ.இயக்கத்தை பிரித்தானிய அரசாங்கம் கோரவில்லை.

அதனால் கருணா குழுவின் ஆயுதங்களைக் களையுமாறு அரசாங்கத்துடன் விடுதலைப்புலிகள் விடுக்கும் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமா?

ஈ.பி.டி.பி. அமைப்பின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, அன்ரன் பாலசிங்கத்தைப் பற்றி ஒருமுறை இப்படி கருத்துத் தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசாங்கம் எங்களின் கோரிக்கைக்கு இணங்கினால் நாங்கள் இன்னுமொரு கோரிக்கையை முன்வைப்போம் என்று பாலசிங்கம் கூறியுள்ளார் என்றார்.

சுவிஸ் பேச்சுக்களுக்காக அரசாங்கத்தின் தேசியப் பாதுகாப்புக்கென அர்ப்பணிப்புடன் இருக்கும் குழுவை அனுப்புவதுடன் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கான உரிய கட்டமைப்பொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு முக்கிய இடமளிக்க வேண்டும்.

நன்றி - திவயின

கூட்டணியைக் குலைப்பதற்கு இடம் கொடுக்கக் கூடாது

கருணாநிதி வேண்டுகோள்

சென்னை—

கூட்டணியைக் குலைக்க இடம் கொடுக்கக் கூடாது என்று தி.மு.க தலைவர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

கூட்டணியின் ஒற்றுமையைக் குலைக்கும் வகையில் வரும் செய்திகளை மறுத்து ஒற்றுமையைப் பாதுகாக்க முன்முயற்சி எடுக்க வேண்டிய பொறுப்பு தி.மு.கவுக்கு கூடுதலாக உண்டு என மார்க்சிஸ்ட் கட்சி கருதுகிறது என்று அந்தக் கட்சியின் மாநிலச் செயலாளர் வரதராஜன் கூறியுள்ளதாக அந்தக் கட்சியின் அதிகாரபூர்வ ஏட்டில் வெளியிட்டிருப்பதைப் படித்தறிந்தேன்.

வரதராஜன் எதையும் சிந்தித்து ஆணித்தரமாகவும், அழுத்தம் திருத்தமாகவும் கருத்துக்களை வெளியிடக்கூடியவர். அவரது பேட்டியின் முதல் பகுதியில் வரும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கவுக்கும் அதனுடன் உடன்பாடு கொண்டுள்ள மற்றக்கட்சிகளுக்கும் தொகுதிப்பங்கீடு நடந்துள்ளதாக வந்து கொண்டிருக்கும் செய்திகள் சீராகவும் இல்லை, ஆரோக்கியமானதாகவும் இல்லை.

தொகுதிப்பங்கீடு குறித்த பேச்சுவார்த்தைகள் முறைப்படி இன்னமும் தொடங்கவில்லை என்பதுதான் உண்மை என்றும் அவர் விளக்கம் தந்துள்ளார்.

இந்த முற்போக்குக் கூட்டணிக்குள் சந்தேக விதைகளைத் தூவி, சலசலப்பை ஏற்படுத்திவிட சதித்திட்டம் வகுத்திருப்போருக்குச் சாதகமாகச் செயற்படுவதென்று சிலர் சங்கற்பம் செய்து கொண்டிருக்கின்றனர்.

இதனை நான் பல்வேறு செய்தியாளர் சந்திப்புக்களில் அவர்களின் சந்தேக வினாக்களுக்கு - அவ்வாறு வெளியிடப்படும் கூட்டணி பற்றிய செய்திகள் நம்பகத்தன்மையானவை அல்ல என்பதை விளக்கியிருக்கிறேன்.

எந்தக் கட்சிக்கு எத்தனை தொகுதி என்ற பங்கீடு பற்றிக்கூட எதுவும் இதுவரை பேசவே தொடங்கவில்லை. தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பு வந்த பிறகுதான் அது பற்றிக் கட்சிகளுடன் கலந்து பேசுகின்ற சூழ்நிலை உருவாகும் என்று நான் தெளிவாக செய்தியாளர் கூட்டங்களில் அறிவித்துள்ளேன்.

அதற்கு முற்றிலும் மாறான தகவலாக ஒவ்வொரு கட்சிக்கும் இத்தனை தொகுதிகள் என்று நான் தெரிவித்துவிட்டதாகச் செய்தி வெளியிட்டிருப்பது விஷமச் செயலே தவிர வேறல்ல என்பதை எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கடமையைத்தான் தோழர் வரதராஜன் எனக்கு நினைவூட்டியிருக்கிறார் என்று நம்புகிறேன்.

கூட்டணி ஒற்றுமையைப் பாதுகாக்க தி.மு.கவுக்குக் கூடுதலான பொறுப்பு உண்டு என்பதாக அவர் குறிப்பிட்டதை நான் அப்படியே எழுத்து மாறாமல் ஏற்றுக்கொள்கிறேன்.

கூட்டணியைக் குலைக்க நமது கூட்டணியிலுள்ள எந்தவொரு கட்சியும் இடங்கொடுத்து விடக்கூடாது என்பதுதான் என்னுடைய அன்பான வேண்டுகோளாகும். தொகுதிகளில் போட்டியிடுவதென்ற அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி முடிவெடுப்போம் என்று அவர் உறுதி கூறியிருப்பதையும் உளமார வரவேற்கிறேன் எனத் தெரிவித்தார்.

திருமாவளவன் பிரச்சினையால் தி.மு.கவுக்குள் பரபரப்பு

சென்னை—

திருமாவளவனை கூட்டணியில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையை பா.ம.க. தலைவர் ராமதாஸ் வலியுறுத்தி வருகிறார். இதில் தி.மு.க. தலைமைக்கு துளியும் விருப்பமில்லையென்று கூறப்படுகிறது.

உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு சட்டசபை பேரவை உறுப்பினர் பதவியை திருமாவளவன் உதறித்தள்ளிவிட்டுச் சென்றதே அந்தக் கோபத்துக்கு அடிப்படைக் காரணம். ஆனால், திருமாவளவனைத் துணைக்கு வைத்துக் கொண்டால்தான் வாக்கு அரசியல் நடத்த முடியுமென பா.ம.க. கருதுகிறது. இந்த ஆயுதத்தை வைத்தே பா.ம.கவைப் பின்னுக்குத் தள்ள தி.மு.க. திட்டமிட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

தி.மு.கவின் அணுகுமுறையில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றங்கள், கட்சிகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் ஆகியவை தற்போது கூட்டணிக் கட்சிகளுக்குள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வைகோவை திருப்திப்படுத்த குழு அமைத்தார் கருணாநிதி!

சென்னை—

தி.மு.க கூட்டணியில் பரபரப்பையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்திவரும் ம.தி.மு.க - கூட்டணியில் நீடிக்குமா? அல்லது வெளியேறுமா? என்ற கேள்வி அனைத்துத் தரப்பிலும் எழுந்துள்ளது.

ம.தி.மு.க பொதுச்செயலர் வைகோ மற்றும் அந்தக் கட்சியின் இரண்டாம் கட்டத் தலைவர்கள் ஆங்காங்கே பேசிவரும் பேச்சுக்களே இந்த எதிர்பார்ப்புக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. இந்தப் பரபரப்பின் எதிரொலியாக கருணாநிதியிடமிருந்து வைகோவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

கோபாலபுரம் இல்லத்துக்கு நேரடியாகச் சென்று கருணாநிதியை வைகோ சந்தித்து தற்போதுள்ள அரசியல் நிலவரங்கள் குறித்துப் பேசினார்.

இந்தச்சந்திப்பின் விளைவாக சில மாற்றங்களை தி.மு.க தலைமை வெளிப்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக தொகுதிப் பேச்சுவார்த்தைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஆற்காடு வீராசாமி தலைமையிலான இந்தக் குழுவில் ஸ்டாலின், வீரபாண்டி ஆறுமுகம், மத்திய அமைச்சர்கள் ராஜா, சுப்புலட்சுமி ஜெக

தொடர்ந்தும் இருந்து வருவதை அந்தச் சந்திப்பின்போது வைகோ தெளிவுபடுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இரண்டு தரப்பிலும் கிராக்கியைப் பெற்றுள்ள ஒரே கட்சியாக ம.தி.மு.க இருந்து வருவதால் ம.தி.மு.கவை உடைக்க அனுமதிக்கக் கூடாது. அது தி.மு.க கூட்டணிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறதோ இல்லையோ, அ.தி.மு.கவை பலப்படுத்திவிடக் காரணமாக அமைந்து விடும் என்று தி.மு.க தலைமை கருதுகிறது.

இந்தக் காரணங்களுக்காக ம.தி.மு.கவை கூட்டணியில் தக்க வைத்துக்கொள்ளத் தேவை

தமது தொகுதிகளில் போட்டியிட

முதல்வர் ஜெயலலிதாவுக்காக 500 இற்கு மேற்பட்டோர் மனு!

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

உக்ரேன் பயணமான விமானப்படை அதிகாரி

அரசாங்கம் விசாரணை

கொழும்பு

பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குத் தெரிவிக்காமல் இலங்கை விமானப்படையின் உயர் அதிகாரி ஒருவர் இரகசியமாக உக்ரேன் நாட்டுக்கு பயணம் மேற்கொண்டமை குறித்து அரசாங்கம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

கனடாவுக்குச் செல்வதாக கூறி இந்த உயர் அதிகாரி எதற்காக உக்ரேன் சென்றார் என்பது குறித்து விமானப் படையினருக்கும் கேள்வி எழுந்துள்ளது.

இவரின் பயணம் குறித்து உக்ரேனில் விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவித்தன.

சர்ச்சைக்குரிய விமானப்படை அதிகாரி குறித்து இதற்கு முன்னைய அரசாங்கத்தின் போதும் பல்வேறு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், அந்தத்தகவல்களும் விரைவில் வெளியாகும் என்றும் விமானப் படையினர் தெரிவித்தனர்.

நெல்லியடி-வதிரி பகுதிகளில் படையினர் சுற்றி வளைப்பு

பருத்தித்துறை

நெல்லியடி-வதிரிச் சந்தியிலிருந்து மாலுசந்தி, நெல்லியடி, திக்கம் ஆகிய வீதிகளை அண்டியுள்ள குடியிருப்புக்களில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். இதன் போது விடுதலைப்புலிகளின் வடமராட்சி கோட்ட அரசியல்துறை அலுவலகம், மகளிர் பிரிவின் அரசியல்துறை அலுவலகம் ஆகியவை அமைந்திருந்த வீதிகளும் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இந்தப்பகுதிகளை சுற்றிவளைத்த இராணுவத்தினரும், பொலிஸாரும் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடத்தினர். இதன் போது அந்தப்பகுதி கிராம அலுவலரும் உடன் சென்றிருந்தார்.

இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதலின்போது படையினர் வீதியால் சென்ற மக்களை வழிமறித்து கடுமையாக சோதனைக்குட்படுத்தியதுடன், அடையாள அட்டைகளை பார்வையிட்ட பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதித்தனர்.

இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதலின் போது விடுதலைப்புலிகளின் வடமராட்சிக் கோட்ட அரசியல் துறை அலுவலகம், மகளிர் அரசியல் துறை அலுவலகம் என்பன இருந்த வீடுகளின் கதவுகள் உடைக்கப்பட்டபின்னர், சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தினர்.

காங்கேசனில் தடுத்துவைக்கப்பட்ட இரு இளைஞர்கள் கொழும்புக்கு

கொழும்பு

படையினரால் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறை விசேட பொலிஸ் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு இளைஞர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இது தொடர்பாக காங்கேசன் துறைப் பொலிஸார் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலக அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

இவர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பிலுள்ள பயங்கரவாத புலனாய்வு விசாரணைப் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சி - நுணாவில் பகுதியில் படைத் தரப்பால் கைது செய்யப்பட்ட 19 வயதான முருகதாஸ் தீபரூபன் மற்றும் மல்லாகம் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட 33 வயதான இரத்தினம் ஆனந்தராஜா ஆகிய இருவருமே மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை - வடமராட்சி பருத்தித்துறைப் பகுதியில் இடம்பெற்ற கிளைமோர் குண்டுத் தாக்குதலையடுத்து படைத்தரப்பால் கைதுசெய்யப்பட்ட பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவ ஆசிரியரான கமலக்கண்ணன் உள்ளிட்ட மூவர் ஏற்கனவே கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

ரி.ஆர்.ஓ தொண்டர்கள்...

வியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் -

மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பில் நடைபெறுவதுடன், இரண்டு பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், நான்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் 20 பொலிஸார் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதைவிட மூன்று தனியான பொலிஸ் பிரிவுகளும் விசாரணைகளை நடத்தும். இந்தச் சம்பவம் தொடர்பான சந்தேகமான தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் எந்தச் செயற்பாட்டுக்கும் அரசாங்கம் ஆதரவு வழங்காது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சர்வதேச அனுதாபத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முனைகிறது என்ற கோணத்திலும் விசாரணைகள் நடத்தப்படவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மூன்று வருடங்களுக்குப் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னெடுத்துச் செல்கின்ற முயற்சிகளுக்கு குழப்பம் ஏற்படுத்தும் வகையில் இத்தகைய செயற்பாடுகளை சில தீய சக்திகள் மேற்கொள்ளலாமென அவர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலை...

மணிக்கும் 12 மணிக்கும் இடையில் கடத்தப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை இந்துக் கல்லூரியின் அதிபராக தங்கராசா 1988 ஆம் ஆண்டு முதல் இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்தேகத்துக்...

நடைபெற்று வருவதாகவும் இரசாயன பகுப்பாய்வு அறிக்கையைக் கொண்டு மேலதிக விசாரணைகள் தொடரும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் கண்டனப் பேரணி

கிளிநொச்சி

அரச படைகளின் ஆதரவுடன் வெலிக்கந்தவில் ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்களை விடுதலை செய்யக் கோரி கிளிநொச்சியில் நேற்று மாபெரும் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்டதைக் கண்டித்தும் அவர்களை விடுவிக்கக் கோரியும் நேற்று காலை 10 மணியளவில் கிளிநொச்சியில் இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

கிளிநொச்சி சந்திரன் பூங்கா மைதானத்திலிருந்து புறப்பட்ட பேரணி- கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள கிளிநொச்சி மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்குச் சென்று மனுக்கள் கையளிக்கப்பட்டன.

அரச சார்பற்ற நிறுவனங்கள், வெகுசன அமைப்புக்கள், அரச திணைக்களங்களைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள், தொண்டர்கள், பிரமுகர்கள் எனப் பெருமளவிலான மக்கள் இந்தக் கண்டனப் பேரணியில் கலந்துகொண்டனர்.

இந்தப் பேரணியில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் -

ஆயுத முனையில் கடத்திச் செல்லப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்களை விடுவிக்காவிட்டால், ஜெனிவா பேச்சுவார்த்தைக்கு தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளை அனுப்பப்போவதில்லையெனத் தெரிவித்தார்.

அம்பாறையில் இன்று ஹர்த்தால்!

அம்பாறை

தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள் கடத்திச் செல்லப்பட்டதைக் கண்டித்தும், தமிழீழவிடுதலைப் புலிகளை போருக்குத் தூண்டும் வகையில் படையினர் நடந்து கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அம்பாறையில் இன்று ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, இன்று முற்பகல் 11 மணிக்கு அம்பாறை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டம் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அம்பாறை பல்துறை ஊடக அமைப்பு தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கில் ஊடகவியலாளர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலைக் கண்டித்தும், திருகோணமலை செய்தியாளர் சுகிர்தராஜன் கொலையைக் கண்டித்தும் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

நாடாளு...

இதனால் அந்த ஆசனத்தைப் பிரித்து சோதனையிடத் தீர்மானித்தனர்.

அதனால் சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகிய உடனேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குத் தயாராகினர். இருப்பினும் சபாநாயகர் நாடாளுமன்றை ஒத்திவைத்ததைத் தொடர்ந்து அவர்கள் நாடாளுமன்றை விட்டு வெளியேறினர்.

நாடாளுமன்ற சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தகவல் தருகையில்- மோப்ப நாய் தரித்து நின்ற இடத்தில் பரிசோதனை செய்ய விசேட அதிரடிப் படையினர் முடிவு செய்ததாகவும், அதனடிப்படையில் நாடாளுமன்றம் பிற்போடப்பட்டதாகவும் தெரிவித்தார். (01)

aat
Stage I, II & III
விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டுள்ளது
புதி பிரிவுகள் ஆரம்பம்
04.02.2006 (சனி) 10.00 am
மேலதிக விபரங்களுக்கு :
CAREER.COM INSTITUTE
167, 1st Cross Street.
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
T.P : 077 6155968
077 3039448
அலுவகை நேரம் : 10.00 - 01.00
(தினசரி)
[/5068]

கோதுமை மாவின் விலை ரூபா 2.50 ஆல் உயர்வு!

கொழும்பு

இறக்குமதிசெய்யப்படும் கோதுமை மாவுக்கு 15 சதவீத வரி விதிக்கப்பட்டிருப்பதால், ஒரு கிலோ மாவுக்கு 2 ரூபா 50 சதம் வரியாக விதிக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக வாணிப அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

எனினும், பிறிமா நிறுவனத்துக்கு இந்த நிதியில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

பெரும்போக அறுவடை நெல்லுக்கு சிறந்த விலையைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மாவின் விலை அதிகரித்தபோதிலும், பாணின் விலையில் எந்தவித மான மாற்றமும் இல்லையென அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, நாட்டில் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய கோதுமை மா தமது கையிருப்பில் இருப்பதாக பிறிமா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய இலங்கையில் பொது மக்களின் கோதுமை மா நுகர்வுக்கு மாதாந்தம் 60 ஆயிரம் மெற்றிக் தொன் கோதுமை மா தேவை.

இதற்கமைய இரண்டு மாதங்களுக்குப் போதுமான மா தமது கையிருப்பில் இருப்பதாகவும், தற்போதைய கோதுமை மாவின் விற்பனை விலைக்கமைய பாணின் விலை அதிகரிக்கவேண்டிய தேவையில்லையென பிறிமா நிறுவனம் மேலும் தெரிவித்தது.

படையினரால் கடத்த...

சிறிது நேரத்தில் 512ஆவது படை முகாமிலிருந்த இராணுவத்தினர் அந்த மாணவனைகடத்திச் செல்வதை வீதியில் சென்றவர்கள் பார்த்தனர்.

இதையடுத்து கிராம அலுவலருக்கு அவர்கள் உடனே தகவல் தெரிவித்தனர். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு கிராம அலுவலர் தகவலைத்தெரியப்படுத்தினார். இதையடுத்து 512ஆம் படையணியின் தலைமையகத்துக்கு மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் நேரடியாகச்சென்று அங்கிருந்த தளபதிகளுடன் இது தொடர்பாக கேள்வி எழுப்பினர்.

அந்த முகாமில் கடத்தப்பட்ட மாணவர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததையும் மனிதஉரிமைகள் ஆணைக் குழுவினர் கண்டுபிடித்தனர்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற மாணவர் எதுவித ஆவணமும் வைத்திருக்காததால் அவரைக் கைது செய்ததாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

ஆனால் போக்குவரத்து விதிமுறைகளை மீறியமைக்காக பொதுமக்களைக் கைதுசெய்யும் அதிகாரம் இராணுவத்துக்குக் கிடையாது என்று மனிதஉரிமைகள் ஆணைக்குழுவினர் தெரிவித்தனர். இதையடுத்து கடத்தப்பட்ட மாணவரை யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் முன்னிலையில் இராணுவத்தினர் ஒப்படைத்தனர்.

மாணவர் மீதான நீதிமன்ற விசாரணைகளுக்குப் பின்னர் அவர் விடுவிக்கப்படுவார் என்று மனித உரிமைகள்ஆணைக்குழுவினரிடம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கடத்தலுக்கு முன்பாக மாணவரையும் அவரது சகோதரியையும் இராணுவத்தினர் வீடியோ படம் எடுத்துள்ளனர். மனிதஉரிமைகள்ஆணைக் குழுவினர் வருவதற்கு முன்பாகவே மாணவனின் சகோதரியை இராணுவத்தினர் விடுதலை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரச தரப்பு...

உலக சுகாதார நிறுவனத்தின் உதவித் தலைவராக 1998/1999 காலப்பகுதியில் பதவி வகித்த இவர் யாழ் நகரில் 1996 ஆம் ஆண்டு குண்டுத் தாக்குதல் ஒன்றில் மயிரிழையில் உயிர் தப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில்-

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜெனிவா பேச்சுக்குழுவில் தன்னையும் மேலும் இரு அமைச்சர்களையும் நியமித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இ.தொ.க விலிருந்து அண்மையில் கட்சி தாவிய ஜனாதிபதி சட்டத்தரணி பைசல் முஸ்தபா மற்றும் இராணுவ அதிகாரி ஒருவரும் அரசாங்கக் குழுவில் இடம் பெறுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

D.C.M
புவியியல்
பகுதி I
வரைபடங்கள்
P.S. குமரன்
ஆரம்பம்
04.02.2006
சனி 12.00 மணி
[C/5067]

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.02.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.